மாலைமணி

ஆசிரியர்:
பி.எஸ்.இளங்கோ

மாலைமணி
ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ

மணி 2 — 3-7-60 — ஒலி 35

எப்போது வரும் அந்த ஆகஸ்டு 31?

குமாரபாளையத்தில் கூடிய நமது பொதுக் குழு இந்தியை எதிர்த்து மிகப் பிரமாண்டமான போராட்டத்தைத் துவக்க முடிவு செய்திருக்கிறது!

நமது பெருமதிப்பிற்குரிய ஜனாதிபதி அவர்கள் இந்தியைப்பற்றி தாம் விடுத்திருக்கும் கட்டளையை ஆகஸ்டு 30ந் தேதிகளுள் திரும்பப் பெறவேண்டுமென்றும், அப்படிப் பெறாவிட்டால் ஆகஸ்டு 31ந் தேதி போர் முரசம் ஒலிக்குமென்றும் திராவிட முன்னேற்றக் கழகம் அறிவித்திருக்கிறது!

தென் புலத்தில் வாழும் மக்கள் சார்பில் திராவிட முன்னேற்றக் கழகம் இந்த வேண்டுகோளை நமது ஜனாதிபதி அவர்களுக்கு விடுத்திருக்கிறது!

தென் புலத்து மக்களை அன்பால், பண்பால், பாசத்தால், நல்ல நேசத்தால் அடக்கி ஆண்டு வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்த வேண்டுகோளை இந்திய நாட்டுக் குடியரசுத் தலைவர் புறக்கணிக்க மாட்டார்—புறக்கணிக்கக் கூடாது என்பதே நமது ஆசையாகும்!

ஆனால், இன்றுள்ள நிலையில் குடியரசுத் தலைவர் தமது கட்டளையை திரும்பப் பெறுவாரா என்பது மிக மிக சந்தேகம் தான்! இந்தி வெறியர்களின் வெறித்தனத்தையும், அவர்களுடைய பிடிவாத போக்கையும் கவனிக்கும் போது—"இது, நடக்காத காரியம்" என்றே நினைக்க வேண்டி இருக்கிறது!

"அனுமதேடங்கள் போடும் காட்டுக் கூச்சல்களுக்கா மதிப்பளிப்பது" என்ற தோரணையில் நமது வேண்டுகோள் புறக்கணிக்கப்படுமானால், மறுநாள்—ஆகஸ்டு 31-ம் நாள் நாடெங்கும்—"போர்! போர்!" என்ற முழக்கத்தை தென்புலத்து மக்கள் வான மதிர முழங்குவார்கள்!

அந்த சின்னஞ் சிறிய குமாரபாளையத்திலிருந்து போர் ஒலி கேட்டவுடனேயே திராவிடமே குலுங்கிற்று! பசித்த வேங்கைக்கு விருந்து கிடைத்தால் எத்தனை மகிழ்ச்சியோ, அத்தனை மகிழ்ச்சி நமது இளைஞர்களுக்கெல்லாம்! 'தோளைத் தட்டுகின்றனர்—வந்து விட்டது போர்—வாளை எடுங்கள்" என்று புன்னகை அரும்ப புரட்சி கீதம் பாடுகின்றனர்!

"எப்போது வரும் அந்த ஆகஸ்டு 31, எப்போது வரும் அந்த ஆகஸ்டு 31" என்று ஏங்கி ஏங்கித் தவிக்கிறார்கள்!

உலகப் புரட்சி வீரர்கள் அனைவரும், தாய்மொழி பாசம் கொண்டவர்கள் அனைவரும் திருநாளாகக் கொண்டாடப் போகும் அந்தப் புரட்சித் திருநாளை, அந்த ஆகஸ்டு 31-ம் நாளை எதிர்பார்த்துக் கொண்டேயிருக்கின்றனர்!

விரல் விட்டு எண்ணிக் கொண்டே—"ஐயோ இன்னும் இரண்டு மாதங்களா? எப்படித் தாங்குவோம்—எப்படி எங்கள் விம்மும் தோள்களை அடக்குவோம், எப்படி எங்கள் துடி துடிப்பைக் கட்டுப்படுத்துவோம்" என்று ஆண்களும், பெண்களும் தவித்துக் கொண்டிருக்கின்றார்கள்!

நாங்கள் தினம், தினம் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற, அந்த ஆகஸ்டு 31- எங்களை பூமாலை போட்டு, ஆராத்தி எடுத்து, வாழ்த்தி, வரவேற்று, கொலு மண்டபத்தில் கொட்டு மேளத்தோடு அமர்த்திடும் நாளல்ல!

"எப்போது வரும், எப்போது வரும்" என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற அந்த ஆகஸ்டு 31 எங்கள் உயிரைக்குடிக்கும் நாள். எங்கள் மண்டையைப் பிளக்கும் நாள், எங்கள் கரங்களை ஒடிக்கும் நாள், எங்கள் சடலத்தைப் புதைக்கும் நாள்!

"வருக, வருக—ஆகஸ்டு முப்பத்தி ஒன்றே! நீ விரைந்து வருக, வருக" என்று மகிழ்ச்சியோடு வரவேற்கும் அந்த நாள் எங்களை வாழ வைக்கும் நாளல்ல! எங்கள் மொழியை வாழவைக்கும் நாள், எங்கள் பின் சந்ததிகளை வாழவைக்கும் நாள்—அதற்காக எங்களை பலி வாங்கும் நாள்!

உலகத்தையே வியக்க வைக்கப் போகும் அந்த நாள்—எங்கள் மானத்தைக் காக்கும் நாள், எங்கள் வீரத்தைக் காக்கும் நாள், எங்கள் நாட்டை விடுவிக்கும் நாளும் அந்த நாள் தான்!

மடமட ஏகாதிபத்திய வெறியர்களை விரட்டியடிக்க, சுகபோகம் அனுபவிக்கும் சுரண்டல்காரர்களை வெளியேற்ற கால்கோள் விழா நடத்தும் புனித நாள், பொன்னாள், யாருக்கும் எப்போதும் கிடைக்க முடியாத புரட்சித் திருநாள்!

தமிழ்ப்பற்றற்றவர்களுக்கு, இனப்பற்றற்றவர்களுக்கு, நாட்டுப் பற்றற்றவர்களுக்கு—சோற்றுத் துருத்திகளுக்கு, மாமிச பிண்டங்களுக்கு, உணர்ச்சியற்ற மரக்கட்டைகளுக்கு, காட்டிக் கொடுக்கும் கங்காணிகளுக்கு, அடிமை புத்தி படைத்த நம் அமைச்சர்களுக்கு உணர்ச்சி என்னும் மின்சாரத்தைப் பாய்ச்சி, அறிவு என்னும் தெளிவை உண்டாக்கித் தரும் நாள்!

"பத்து பேர்—பேசத் தான் தெரியும், வாய் வீச்சுக்காரர்கள், கையாலாகதவர்கள். கதை எழுதிப் பிழைப்பவர்கள், பேச்சால் மயக்குபவர்கள், பெரிய புத்தி இல்லாதவர்கள், சின்னபுத்தி படைத்த கபோதிகள்-உலகம் அறியாதவர்கள், அரசியல் தெரியாதவர்கள், நாட்டு நடப்பை உணராதவர்கள், நல்ல காரியங்கள் எதையும் செய்யாதவர்கள், சுயநலக்காரர்கள், சுத்த சோம்பேறிகள்" என்று கிண்டல் புரிந்து வந்த சதைக் கூளங்கள்—யார் வீட்டு சோற்றையோ தின்று கொழுத்து கோயில் காளைகளைப் போல் திரியும் சடலங்கள்—குலை நடுங்க கைகளும், கால்களும் நடுங்க, மறைவிடம் தேடி ஓடிப் பதுங்கும் நாள் ஆகஸ்டு 31-அது தான் இந்த நாட்டின் விடுதலைத் திருநாளும்!

தென்னகத்தின் இதயம், தமிழகத்தின் உயிர் நாடி, நாவினால் நாட்டையாளும் எங்கள் நாவரசர் கூறியபடி "தோட்டாக்கள் அங்கே, அதைத் தாங்கும் இதயங்கள் இங்கே" என்ற உண்மையை உலகுக்கு எடுத்துக் காட்டும் நாள் தான் ஆகஸ்டு 31!

எங்கள் மாபெரும் தலைவர்—"கணீர், கணீர்" என்று ஒலிக்கும் வெண்கல குரலால், வீரம் விளையாடும் பேச்சால், சிம்ம நோக்கால், எங்கள் சிந்தையைக் கவர்ந்து, கோழைகளையும், மோழைகளையும் வீரர்களாக்கி, விடுதலை வானைத் தாக்கச் சொல்லும் எங்கள் சம்பத் கூறியபடி—துப்பாக்கிக் கட்டைகளை நாங்கள் முறைத்து முறைத்துப் பார்ப்போம்—அது தன்னாலே வளைந்து ஒடிந்து கீழே விழும்! அதை உங்களுக்கெல்லாம், எடுத்துரைக்கும் நாள் தான் அந்த ஆகஸ்டு 31!

அந்த ஆகஸ்டு 31 'எப்போது வரும், எப்போது வரும்' என்ற எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டே இருங்கள்! இன்னும் 65 நாளில் அந்த ஆகஸ்டு 31 வந்துவிடும்!

அன்று மண்டைகள் உடைந்தாலும், குண்டுகள் பொழிந்தாலும்—'ஒழிக இந்தி. வாழ்க திராவிடம்" என்ற இலட்சிய ஒலியோடு கீழே விழுங்கள், செத்து மடியுங்கள்!

அடித்தாலும், உதைத்தாலும், உயிரையே குடித்தாலும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவைகளை மறவாதீர்கள்!

நமக்கு நாடு தான் பெரிது, நாச வேலைகள் அல்ல!

நமக்கு மொழி தான் பெரிது-காலித்தனமல்ல! இதை காலித்தனங்கள் புரியும் எதிரிகளுக்கு செயலால் உணர்த்திக் காட்டுங்கள்!

ஆகஸ்டு 31 வருகிறது-விரைந்து வருகிறது- தயாராகுங்கள்; தயாராகுங்கள்!

துப்பாக்கியால் சுட்டால் ஓடாதீர்கள்!
அப்படியே படுத்து விடுங்கள்!

இரும்பு பூட்ஸ் கால்கள் நம் இதயங்களை மிதிக்கட்டும்!
இதயமில்லா ஆட்சியைக் கண்டு உலகம் சிரிக்கட்டும்!

உங்களுக்கெல்லாம் நான் மெத்த பயிற்சி அளித்து விட்டேன்!
இனி நீங்கள் காட்ட வேண்டியது உங்கள் வீரத்தைத்தான்!

வீரத்தைக் காட்டுங்கள்!
நாம் யார் என்பதைச் சொல்லுங்கள்!

சென்னை 89வது வட்டத்தில் நடைபெற்ற தியாகராயர் நினைவு மன்ற முதலாம் ஆண்டு விழாவில். அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு வருமாறு :—

அன்புள்ள தலைவர் அவர்களே அருமை நண்பர்களே! தாய்மார்களே! இந்த வட்டத்தில் நடைபெறும், தியாகராயர் நினைவு மன்ற முதலாவது ஆண்டு விழாவில் கலந்து பேசும் வாய்ப்பினை அளித்த இம்மன்றத்தினருக்கு எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெண்ணுடை வேந்தர் தியாகராயர் பெயரால் ஒருமன்றம் நிறுவி நல்லமுறையில் பணியாற்றிவரும் உங்களைப் பாரராட்டுகிறேன்.

தமிழ் நாட்டு அரசியலில் தியாகராயர் முக்கியமான விழிப்புணர்ச்சியை உண்டாக்கியிருக்கிறார்,

இன்று இங்குள்ள அரசியலில் புரட்சியை உண்டாக்கிய பெருமை நமது வெண்ணுடை வேந்தர் தியாகராயருக்கே உரியதாகும்.

தியாகராயருக்கு முன், இந்த நாட்டில் அரசியல் உணர்ச்சியின்றி இங்குள்ளோர் அரசியலைப் பற்றி அறியாதவர்களாகவே இருந்து வந்தார்கள்,

வடசென்னையில் தோன்றிய சர் தியாகராயர் நமது மக்களுக்கு .. தமிழர்களுக்கு விடுதலை உணர்ச்சியையும், பார்ப்பனரல்லாதார் எண்ணத்தையும் உண்டாக்கி சமுதாயத்திலிருந்த சீர்கேடுகளை விளக்கினார்,

இங்குள்ள தமிழர்கள் தலை நிமிர்ந்து நிற்பதற்காக அரும்பாடு பட்ட சர். தியாகராயர், அரசியல்,

நாட்டு மக்களுக்கு
அறிஞர் அண்ணா
இடும் அன்புக் கட்டளை!

கல்வி, பொருளாதாரம் முதலியவைகளில் நமது மக்கள் முன்னேறுவதற்காகப் பல வழிகளில் பாடுபட்டார்.

சர். தியாகராயரின் அரும் பணியாலும், அவரின் ஒப்பற்ற தியாகத்தாலும் தான், நீதிக் சட்சியும், தென்னிந்திய நிலவுரிமை சங்கமும், சமுதாய சீர்திருத்தத்துக்காக பணியாற்றிய சுயமரியாதை இயக்கமும் தோன்றியது, அதன் வழி தோன்றல் தான் திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமுமாகும்,

இந்த நாட்டில் தியாகராயர் அரசியல் எதிரிகளின் தொல்லைகளுக்காளாகி பல இன்னல்களைப் பெற்றார். அவர் குடும்பம் வாழ்க்கையில் பல துன்பங்களுக்களாகி இன்று அந்தக் குடும்பமே கல, கலத்துப் போய்விட்டது,

அவர் இந்த நாட்டு மக்களின் நல்வாழ்விற்காக -பார்பனரல்லாத மக்களின் உயர்விற்காக செய்த தொண்டுகள் அளவிட்டுக் கூற முடியாது.

வெண்ணுடை வேந்தர் தியாகராயர் அரசியலில் பணியாற்றியதால்.. மக்கள் தொண்டு செய்ததால் பல இன்னல்களைப் பெற்றார். ஆனால் இந்த நாட்டில் அரசியலில் சேர்ந்ததால் பலர் உயர்ந்துமிருக்கிறார்கள்.

காங்கிரசில் சேர்ந்து பணியாற்றியவர்கள் இன்று வாழ்க்கையில் எப்படி உயர்ந்திருக்கிறார்கள், மற்ற அரசியல் கட்சிகளில் பணியாற்றியவர்கள் எப்படிப்பட்ட தூற்றலுக்கு .. இன்னல்களுக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்ட ஒரு சம்பவத்தைக் கூற ஆசைப்படுகிறேன்.

பல ஆண்டுகளுக்கு முன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நமது நாவலர் படித்துக கொண்டு வந்தார். அப்போது அவருக்கு நாராயணசாமி என்று பெயர். அதே நேரத்தில் நமது அன்பழகனும் படித்துக் கொண்டிருந்தார். அவருக்கு அங்கு ராமைய்யா என்று பெயர்.

அதே பல்கலைக் கழகத்தில் இன்னொரு ராமைய்யா என்பவரும், திரவியம் என்பவரும் படித்துக் கொண்டிருந்தார்கள்,

என்னை அந்தப் பல்கலைக் கழகத்தில் பேசுவதற்காக அழைப்பதற்கு முயற்சி செய்தார்கள். அதை ராமைய்யாவும், திரவியமும் எதிர்த்து "அண்ணாதுரை வகுப்பு வாதி. அவர் வருவதால் மாணவர்களிடையே குழப்பம் ஏற்படும், மாணவர்கள் மனதில் தீய எண்ணங்கள் உண்டாகும்" என்று கூறி எதிர்த்தார்கள்.

பின் என்னை வரவழைப்பது என்று பெரும்பான்மையோரால் முடிவு செய்யப்பட்டது,

நான் அங்கு போகும் போது ராமைய்யா என்பவர் அங்கு இல்

(4ம் பக்கம் பார்க்க)

நீங்கள் 100 பிணங்கள் கொடுங்கள்! நான் அடுத்த ஆண்டில் உங்களுக்கு திராவிட நாட்டைத் தருகிறேன்!

(அண்ணா பேச்சு)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

லாது வெளியூர் போய் விட்டார். "இந்த பாபி அண்ணாத்துரையைப் பார்க்கவே கூடாது" என்று கருதியோ, என்னவோ அண்ணாமலை நகரை விட்டே வெளியூர் போய் விட்டார். அப்படிப்பட்ட ராமையா தான் இன்று சென்னை மாநிலத்தின் அமைச்சராக இருக்கிறார். மின்சார இலாகாவின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

அன்று மாணவராக இருந்து காங்கிரஸ் கட்சியில் பணியாற்றிய திரவியம் செங்கற்பட்டு கலெக்டராக இருந்து விட்டு இன்று சென்னை சர்க்காரில் ஏதோ ஒரு பெரிய பணியில் இருந்து வருகிறார்.

ஆனால் அன்று அதே பல்கலைக் கழகத்தில் படித்த நமது நாவலரும், அன்பழகனும் இன்று எப்படி இருக்கிறார்கள். இன்று அரசியலில் அவர்களுக்கு என்ன கிடைக்கிறது.

சொல்லடி, கல்லடி, ஏசல், தூற்றல் இவைகள் தான் கிடைக்கிறது. பல இன்னல்களும், எதிர்ப்புகளுக்குமிடையே தான் அவர்கள் அரசியலில் பணி செய்ய வேண்டியிருக்கிறது.

இன்று அரசியலே விநோதமாகத் தான் இருக்கிறது.

நம்முடைய இயக்கத்தில் இருப்பவர்கள் எதிர்ப்புக் கிடையே தான் பணியாற்ற வேண்டும்.

நம்முடைய இயக்கத்தில் ஏழைகளும், வாழ்க்கையில் வசதியற்றவர்களும் இருந்து வருகிறார்கள்.

காங்கிரசில் பஸ் முதலாளிகளும், பெர்மிட்க்காரர்களும். ஆலை முதலாளிகளும், செல்வந்தர்களும், வசதி மிக்கவர்களும் தான் இருந்து வருகிறார்கள்!

இந்த நிலை தியாகராயர் காலத்திலிருந்தே இருந்து வருகிறது. தியாகராயர் இந்த நாட்டு மக்களுக்காக அரும்பாடுபட்ட உத்தமத் தலைவர். அவரின் உழைப்பால் அவரின் தியாகத்தால்தான் இன்று நாட்டில் நல்ல விழிப்பு அடைந்திருக்கிறது. நம் மக்கள் எல்லாம் அரசியல் உணர்ச்சி பெற்று வீரமுடன் வாழ்கிறார்கள்.

இங்கு தோழர் மணிவண்ணன் நமது கூட்டங்களில் கலகம் செய்து வருவதைப் பற்றியும், கல்லெறிவதைப் பற்றியும், நம்முடைய தோழர்களை தகாத முறையில் தாக்கி வருவதைப் பற்றியும் கூறினார். இது நமக்குப் புதிதல்லவே நாம் ஆரம்பத்திலிருந்தே இதை அனுபவித்து வந்திருக்கிறோம். எப்படி அனுபவித்ததற்குப் பின் தான் இவ்வாறு நல்ல முறையில் வளர்ந்து வந்திருக்கிறோம். இதைப் பற்றி இப்போது கவலை பட வேண்டியதில்லை. இந்த மாதிரி காரியங்களால் எல்லாம் நமக்குக் கேடு வந்து விடாது. அந்தக் காலங்களில் நமக்கு மாற்றார்கள். கொடுத்த தொல்லைகளை விட இன்று குறைவு தான்!

அந்தக் காலங்களில் இருந்த கல் வீச்சுகள், கத்தி வீச்சுகள், காலித்தனக்காரர்கள் இப்பொழுது குறைவு, அன்றிருந்த பயில்வான்கள், அன்றிருந்த ரௌடிகள், இன்றில்லை, இன்று ரௌடிகள் பயில்வான்கள் என்று கூறிக் கொண்டிருப்பவர்கள், இன்று கூட்டங்களில் கலகம். காலித்தனம் செய்பவர்கள் கூலிக்காக, வயிற்றுப் பிழைப்புக்காக இருப்பவர்கள், இன்று எங்கு காசு அதிகம் கிடைக்கிறதோ, அங்கு போய் விடுவார்கள். அது மாத்திரமல்ல. இன்று ரௌடிகள், பயில்வான்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள், அன்றைய தினம் நம்மிடம் கலகம் செய்தார்களே அந்த ரௌடிகள், பயில்வான்கள் மூச்சு விட்டால் கீழே விழுந்து விடுவார்கள்! அப்படி பல வாய்ந்தவர்கள் கலகம் செய்த காலத்திலேயே, பயப்படாத நாம், இன்று பயப்படப் போகிறோம்!

நாம் அதைப் பற்றி யெல்லாம் கவலைப்பட வேண்டியதில்லை காங்கிரசில் இன்றிருக்கின்ற ரௌடிகள் என் போர்கள் பயில்வான்கள் என் போர்கள் கல்லெறிவதற்கு 10 ரூபாயும், கூட்டத்தைக் கலைக்க 100 ரூபாய், தலைவர்களைத் தாக்க – குத்த–கொலை செய்ய 1000 ரூபாய் வாங்கின்றவர்கள் தான் இருக்கிறார்கள் அப்படியாவது பிழைக்கட்டுமே.

20 வருடங்களுக்கு முன் நான் நகர மன்ற தேர்தலுக்கு நின்றேன் அப்போது முத்துவேல் என்றஒரு பயில்வானை வைத்து என் கூட்டத்தில் கலகம் செய்ய முயற்சித்தார்கள்.

பின் கூலித் தகராறில் அவர்களையே எதிர்த்து நம்முடன் சேர்ந்தார்.

ஆகவே இதைப் பறறிய கவலையே நமக்கு வேண்டாம்!

நம்மைத் தாக்கியும் இழித்தும் பேசி வந்த வீபூதி வீரமுத்துவை விட வா இப்போதுள்ளவர்கள் பேசி விடப் போகிறார்கள்.

அவர் இப்போது எங்கே அவர் என்னவானார், கடைசியில் அவரை நமது அன்பில் தர்மலிங்கம் காப்பாற்ற வேண்டியதாயிற்று.

கலகமும், காலித்தனத்தையும் கண்டு அந்தக் காலத்திலேயே அஞ்சவில்லையே, இன்று ஏன் அதைப் பற்றிப் பேசுகிறீர்கள்!

இன்று காங்கிரஸ்காரர்களுக்கு இருக்கும் வயிற்றெரிச்சல் எல்லாம் நமது வளர்ச்சி தான் இன்று மக்களிடை செல்வாக்கு பெற்று வளர்ந்து வருகிறோமே என்ற அச்சம் தான்.

சென்னை நகரமன்றத்தில் நாம் நிர்வாகப் பொறுப்பைப் பெற்று விட்டோமே என்ற பீதிதான். அடுத்து வரும் பொதுத் தேர்தலில் அவர்கள் கதி என்னவாகும் என்ற சந்தேகத்தால் இன்று இந்த மாதிரி இழிசெய்கையில் இறங்குகிறார்கள். அப்படிச் செய்து அழித்துவிட எண்ணுகிறார்கள்.

தஞ்சைத் தரணியில் 21 நாள் சுற்று பிரயாணம் செய்த முதலமைச்சர் காமராசர் அங்கு நமது வளர்ச்சியையும், நமக்கு மக்களிடம் உள்ள செல்வாக்கையும் கண்டு திகலடைந்து போய் நம்மைப்பற்றி கேவலமாகப் பேசுகிறார்.

தஞ்சைப் பகுதியில் நானும் சுற்றிவிட்டுத் தான் வந்திருக்கிறேன். ஆனால் அவர் அதிகாரிகளின் துணை கொண்டு, அவர் பின்னால் 10–20 ஜீப்களும், 20–25 கார்களும் தொடர அங்கு பவனி வந்தார், எங்கு போனாலும் அங்கு நமது கொடிகள் பறப்பதைப் பார்த்தார்—மரங்களிலும், கம்பங்களிலும் கொடிகள் பறப்பதைப் பார்த்தார். அந்த பொறுமையால் தாக்குகிறார். நம்முடைய கழகம் இன்று தஞ்சை மாவட்டத்தில் பல கிளை கழகங்களைக் கொண்டு வளர்ந்திருக்கிறது. தஞ்சைப் பகுதியில் 750 கிளைகள் இருப்பதாக நமது பொதுச் செயலாளர் அன்று குமாரபாளையத்தில் கூறினார். முன்பு 125 கிளைகள் தான் இருந்தது.

இப்படி நாம் வளர்வது கண்டு தான் தாக்குகிறார்கள்!

கலகம் செய்கிறார்கள்—அதைப் பற்றி நாம் கவலைப்படக் கூடாது.

நமக்கு இருக்கும் மகத்தான பணிகளைப் பற்றி கவனித்து, அதை நிறைவேற்றும் வழிகளில் தான் பணியாற்றி வர வேண்டும்.

நமக்கு இப்போது கலகம் செய்கின்ற பட்டியலோ, காலித்தனம் செய்கின்ற பட்டியலே, கல்லெறிகின்ற பட்டியலோ தேவையில்லை. நமக்கு இப்போது தேவைப்படுவது போராட்டத்தில் ஈடுபடுபவர்களுடைய பட்டியில் தான்.

நம்முடைய பொதுக் குழு இந்நிலை எதிர்ப்பதற்காக ஒரு போராட்டக் குழுவை அமைத்து விட்டது.

அந்தப் போராட்டத்தில் யார், யார் ஈடுபடப் போகிறோம், தடியடிகளுக்கும், துப்பாக்கி குண்டுகளுக்கும் யார் யார் தயாராக இருக்கிறோம் என்ற பட்டியலை நாம் தயாரிக்க வேண்டும்,

நாம் நமது போராட்டக் குழுவிற்கும், நமது நாவலருக்கும், எந்தவித தியாகம் செய்வதற்கும் எப்படிப்பட் இன்னல்களை ஏற்பதற்கும் நெஞ்சுதியோடும், தியாக உள்ளத்தோடு, விடுதலை வேட்கையோடும் வருகிறோம் என்ற கணக்குகளைக் கொடுக்க வேண்டும்.

எத்தனை ஆண்டுகள் சிறைச்சாலைகளுள் இருக்க நேரிட்டாலும், சிறைச்சாலையிலேயே நாம் நமது உயிர்களை விட வேண்டிய நிலை ஏற்பட்டாலும் அதற்கும் தயாராக யிருக்கிறோம் என்ற பட்டியலை—கணக்கினை நமது நாவலருக்குக் கொடுக்க வேண்டும்!

நான்கு பேர்கள், ஐந்து பேர் சேர்ந்து பட்டியலைத் தயாரித்து நமது நாவலருக்கு அனுப்புங்கள்!

நமது நாவலர் இன்று பல இடங்களிலும் சுற்றுப் பயணம் செய்து வருகிறார்.

நம்முடைய பொதுக்குழு நியமித்த போர்க்குழு வகுக்கும் திட்டப்படி நாம் தயாராக இருக்க வேண்டும்

இந்தப் போராட்டத்தில் குடும்பம் குடும்பமாகப் பங்கு கொள்ள வேண்டும்!

நீங்கள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள் "எங்கள் அண்ணனோடு வருகிறோம் தம்பிகளோடு வருகிறோம் தாயரோடு வருகிறோம், நண்பர்களோடு வருகிறோம்" என்ற பட்டியலை நீங்கள் தர வேண்டும்.

தாய் மொழியையும், நம்முடைய திருநாட்டையும் மீட்க நாங்கள் தயாராக யிருக்கிறோம் என்ற வீர உள்ளத்தோடு வர வேண்டும்!

நீங்கள் போராட்டத்தில் ஈடுபடுவதற்காக இரண்டு கைகளுடன் வருவீர்கள். அதில் ஒரு கை இழந்து முடமாகத் திரும்ப வேண்டிய நிலை வரும்.

இரண்டு கால்களுடன் வரலாம் ஒரு காலை இழந்து நொண்டியாகத் திரும்ப நேரிடலாம், அல்லது இரண்டு கரங்களையும் இழந்து அங்கஈனர்களாக யிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும் ஏற்படலாம். இரண்டு கண்களுடன் போராட்டத்தில் பங்கு பெற வரலாம் ஒரு கண்ணையாவது, இரண்டு கண்ணையாவதுயிழந்து குருடர்களாக வேண்

(10ம் பக்கம் பார்க்க)

நாட்டு மொழியைக் காக்க வீட்டுக்கொருவர் வாரீர்! வாரீர்!!

நாங்களெல்லாம் கைது செய்யப்படலாம்!

போர்முறை பின் உங்கள் கையில்தான்

எந்த விலை கொடுத்தேனும் நாட்டை மீட்போம்!

மக்கள் கூட்டத்தில்

சம்பத் முழக்கம்

சென்னை 13 வது வட்டம் பவளக்காரத் தெருவில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் கூட்டம் 22-6-60ம், தேதி மாலை எஸ், எஸ் துரைசாமி தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரையாகப் பேசும்போது " தம்மை காங்கிரஸ் காலிகள் தாக்கியதைப் பற்றியும், அதற்கு அதிகாரிகள் பாரா முகமாக இருந்ததைப் பற்றியும் விளக்கமாகப் பேசினா பின் நகரமன்ற உறுப்பினர் அ. செல்வராசன் இந்த வட்டத்தில் கழகம் செய்து வரும் பணிகளைப் பற்றியும். மாற்றுக் கட்சியார் இங்கு செய்து வரும் ரௌடித் தனங்களையும், இங்கு கழகத் தோழர்களைத் தாக்கிவருவதைப் பற்றியும். இதை வளரவிடாது ஆட்சியாளர்கள் பாதுகாக்க வேண்டுமென்றும், அப்படிச் செய்யா விட்டால் இங்கு அமைதி நிலவாது என்றும் கூறி கழகம் நடத்தும் மகத்தான போராட்டத்தில் யாவரும் பங்கு கொள்ள வேண்டுமென்றும் கேட்டு ஆவேசமாகப் பேசினார்

பின் திரு. க. வி. ராதாகிருஷ்ணன் முன்னேற்றக் கழகத்தின் பணிகளைப் பற்றி விளக்கிப் பேசியதோடு. மாற்றுக் கட்சியாரும், காங்கிரஸ் இதழ்களும் முன்னேற்றக் கழகத்தைப்பற்றி எழுதி வரும் ஆபாசச் செயல்களை ஆதாரங்களோடு விளக்கினார்.

'நம்நாடு' துணை ஆசிரியர் திரு. ஆர். எஸ். பாண்டியன் இந்திய சர்க்காரின் ஏகாதிபத்திய வெறியைப் பற்றியும், தென்னகத்தார் மீது இந்தியைப் புகுத்தி தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் அடக்கு முறைச் செயல்களைப் பற்றியும், மிக விரிவோடு பேசினார்,

மக்கள் சபை உறுப்பினரும். கழகத் தலைவர்களில் ஒருவருமான "சொல்லின் செல்வர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் மக்களின் ஆரவாரத்திடையே பேசியது வருமாறு:-

அன்புள்ள தலைவர் அவர்களே நண்பர்களே! தாய்மார்களே! தோழர்களே!

இந்தப் பகுதியில் நடைபெறும் இந்த மாபெரும் கூட்டத்தில் கலந்து உங்களைச் சந்திக்கும் பெரும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு மிகவும் மகிழ்கிறேன்.

நான் இன்று இங்கு பேசுவதற்கு இந்தப் பகுதிக்கு வந்ததும் எனக்குச் சென்ற பத்தாண்டுகளுக்கு முன் நடைபெற்ற சம்பவங்கள் எல்லாம் எனது நினைவிற்கு வந்தது.

நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் துவங்குவதற்கு முன், நம்முடைய தோழர்கள் பலருடன் ஆலோசனை செய்தது இந்தப் பகுதியில் தான் திருவொற்றியூர் திரு. டி. சண்முகம் அவர்களுக்குச் சொந்தமான வீடொன்று இந்தப் பகுதியில் இருந்தது. அந்த வீட்டில் தான் அன்று கூடி யோசித்தோம்.

நாம் திராவிடர் கழகத்திலிருந்த போது பெரியார் செய்த சில காரியங்கள்-அவர் போக்கு நமக்குப் பிடிக்காததால் நாம் அவரோடு உடனிருந்து பணியாற்ற முடியாத நிலை ஏற்பட்டதால் அதைப் பற்றி நீண்ட விவாதம் செய்து முடிவு செய்தது இந்தப் பகுதிதான். எனக்கு அந்த பழைய நினைவுகளெல்லாம் என் கண் முன் நின்றது.

நமது தோழர்களில் பலர் "நாம் திராவிடர் கழகத்தில் மிக நல்ல முறையில்பணியாற்றி அதன் வளர்ச்சியில் பங்கு பெற்று வந்திருக்கிறோம் நாம் அந்தக் கழகத்தைக் கைப்பற்றி நம் கருத்துப்படி அதிலிருந்து பணியாற்ற வேண்டும் நாம் பிரிந்து செல்லக் கூடாது என்று வாதாடினார்கள்:

மற்றும் பல தோழர்களும், நமது அண்ணா அவர்களும் நாம் இனி திராவிடர் கழகத்திலிருந்து பணியாற்ற முடியாது. நமது பிரியம் போல் காரியம் செய்ய முடியாது. அதிலிருந்து பிளவுகளை உண்டாக்கிக் கொண்டிருப்பதை விட நாம் பிரிந்து தனியாக ஒரு அமைப்பை நிறுவி. நாட்டு மக்களுக்கான நல்ல திட்டங்களை வகுத்து பணியாற்ற வேண்டுமென்று வாதாடினார்கள்.

அதன்படி தான் நாம் நமது கழகத்தைத் துவக்கினோம்.

அதன் துவக்க விழாவைத் தான் வடசென்னையில நமது அண்ணா அவர்கள் கொட்டு மழையில் துவக்கினார். அதற்கு இருவண்ண கொடியை அமைத்தோம். அன்று நாம் எந்தெந்த நிலையில் இருந்து இந்தக் கழகத்தைத் துவக்கினோம். இன்று நாம் எப்படி வளர்ந்திருக்கிறோம். இன்று நாம் எப்படிப்பட்ட பணிகளை, நாம் வைத்துப் பணியாற்றுகிறோம். என்பதெல்லாம் இப்பகுதிக்கு வந்ததும் என் கண்முன் நிற்க ஆரம்பித்தது.

எனக்கு முன் பேசிய தோழர்கள் காங்கிரஸ்காரர்கள் நமது கழகத்தை இழிந்த முறையில் தாக்கி வருவதைப்பற்றியும், காலிகளும், கயவர்களும் நமது கழகத் தோழர்களைத் தகாத

(8ம் பக்கம் பார்க்க)



12

சமூக சேவகி!

"ஹலோ, மிஸ்டர் கோபால்! கமான், கமான்!

"ஓ! சேகரா? கம் இன், கம் இன்!"

"ஹவ்வார் யூ பானு, ஹவ் வார் யூ!"

"சேகர்! ஒரு குட் நியூஸ் தெரியுமோ?"

"என்ன குட் நியூஸ் சாந்தா!"

"நாங்களெல்லாம்—டே ஆப்டர் டுமாரோ பிக்னிக் போகிறோம்-தெரியுமோ?"

"நாங்களெல்லாம் என்றால்..."

"உங்களையும் சேர்த்துதான் சேகர்!"

"ஓ! அப்படின்னா ஸ்வீட் நியூஸ் என்று சொல்லுங்கோ!"

"குட் அண்ட் ஸ்வீட் நியூஸ் சேகர்! அப்படித்தானே சேகா!"

"எஸ் சாந்தா, எஸ்!"

"பானு! உனக்கு இன்னைக்கு எங்கேயாவது எங்கேஜ்மெண்ட் இருக்கா!"

"நோ, நோ—ஓய். சாந்தா!"

"சினிமாவுக்குப் போகலாமா என்று கேட்டேன்!"

"ஓ! போகலாமே! மின்லெணடில் யங்க் லவ் ஓடியனில் அசிஸ்டெண்ட் ஹஸ்பெண்ட்—எதுக்கு போகலாம்?"

"என் பானு? ஓல்டு லவ் கிடையாதா?"

"அது, எதுக்கு நமக்கு?"

பாரத் இந்த் சேவா சங்க காரியதரிசி குமாரி சாந்தா தேவி சமூக சேவையில் ஈடுபட்டது முதல் இப்படித்தான் மகிழ்ச்சியோடும் இன்பத்தோடும் காலம் கழித்து வந்தாள்!

"சமூக சேவைக்கு ஏற்றத் தாழ்வு, ஆண்கள், பெண்கள் என்ற வித்தியாசம் அறவே கூடாது' என்பது தான் சாந்தாவின் எண்ணமாகும்!

தனசேகரம் பிள்ளை படித்துப் படித்து சொன்னபோதெல்லாம் சாந்தாவுக்கு சமூக சேவையில் ஈடுபட விருப்பமே இல்லை! ஆனால் இப்போதுதான் சமூக சேவையில் இருக்கிற புகழ், மதிப்பு, மகிழ்ச்சியெல்லாம் தெரிய ஆரம்பித்தது!

"சாந்தா வேலைக்குப் போயிருந்தால் இத்தனை மகிழ்ச்சியோடு இருந்திருக்க மாட்டாள் சாந்தா எத்தனை மகிழ்ச்சியோடு, எத்தனை புகழோடு வாழ்கிறாள்" என்று தனசேகரம் பிள்ளையின் உள்ளத்தில் களிப்பு தாண்டவமாடிற்று!

அத்தோடு தனசேகரம் பிள்ளையின் புகழும் உலகமெங்கும் பரவிவிட்டது!

"சீமான் தனசேகரம் பிள்ளையின் மகள் சாந்தா எல்லோருக்கும் இலவசமாக மருந்து கொடுத்து மருத்துவம் பார்க்கிறாள்! அத்தோடு ஏழை எளியவர்கள் வீட்டிற்குச் சென்று அவர்களுடைய துன்பத்தையும துடைக்கிறாள்! மனித ஜென்மம் எடுத்தால் இப்படியல்லவா எடுக்க வேண்டும்" என்று ஊரார் பேசிக் கொள்ளும் போது தனசேகரம் பிள்ளை இன்பத்திலேயே மூழ்கி விடுவார்!

"தனசேகரம் பிள்ளையின் மானம் இப்படிப் பறி போக வேண்டும்! சமூக சேவை என்ற பெயரால் பெற்ற பெண்ணை ஊரிலே அலைய விட்டு ஓட்டு வேட்டையாட எண்ணி விட்டான் போலும்! சேச்சே என்னதான் படித்திருந்தாலும், சமூக சேவையில் ஈடுபட்டாலும் இப்படி நாணம் இல்லாமல் ஊரிலே அலைவது ஊருக்கே கேவலமாக இருக்கிறது' என்ற சிலர் பேசிக் கொள்வதும் தனசேகரம் பிள்ளையின் காதில் விழத்தான் செய்கிறது!

என்ன இருந்தாலும் தனசேகரம் பிள்ளை காரியவாதியல்லவா? "உலகம் பலதும் பேசும்" என்று எதையுமே காதில் வாங்கிக் கொள்ளுவதில்லை!

"பாரத் இந்த் சேவா சங்கத்தின் காரியதரிசி பதவியை ஏற்றுக் கொண்டது முதல் சாந்தா எளிய வாழ்க்கையைத் தான் கடைபிடித்து வருகிறாள்! தூய வெள்ளைக் கதராடையைத் தான் உடுத்திக் கொள்ளுகிறாள்! தினமும் காலையில் எழுந்து காந்தி மகாத்மாவின் படத்திற்கு பூமாலை சூட்டி பூஜை செய்த பின்புதான் அவள் ஆகாரமே சாப்பிடுகிறாள்! தினம் ஒரு கிராமத்திற்குச் சென்று இல்லாதவர்களுக்கு தான தர்மம் செய்து அவர்களுடைய வறுமையை போக்குவதில் தான் கண்ணும் கருத்துமாக இருக்கிறாள்! அப்படி இருந்தும் ஊரும், உலகமும் தூற்றுகிறது என்றால் நாம் தான் என்ன செய்ய முடியும்" என்று தனசேகரம்பிள்ளை சில பல நேரங்களில் வருத்தப்படுவதும் உண்டு!

"சமூக சேவையில் ஈடுபட்டுள்ள பெண்கள் எல்லோருமே இப்படித் தானே இருக்கிறார்கள்! நாலு பேர்களோடு பழகினால் சந்தர்ப்பம் எதை எதையோத் தான் செய்யச் சொல்லும்! அதையெல்லாம் பார்த்தால் உலகமே நடைபெற முடியாது" என்று தனசேகரம்பிள்ளை கன்னத்தில் கையை வைத்துக் கொண்டே யோசித்துக் கொண்டிருந்தார்!

வெளியில் காரின் ஹாரன் சப்தம் கேட்டது! "இதோ வந்து விட்டேன் சேகர்" என்று துள்ளிக்குதித்துகொண்டு சாந்தா ஓடினாள்!

காலையிலே கதராடை—மாலையிலே நைலான்!

காலையிலே விபூதி-மாலையிலே பவுடர்!

காலையிலே சமூக சேவை—மாலையிலே பார்க்கு, கடற்கரை, சினிமா!

"உலகம் என்னுவதிலும் தவறில்லை" தனசேகரம் பிள்ளையின் முகத்தில் கவலை ரேகை லேசாகப் படர்ந்திருந்தது!

(வளரும்)

●

'தென்னகம்' வளர்ச்சி நிதி
சிறப்புச் சொற்பொழிவுகள்

(1)
தியேட்டர் ராயல், கோவை
காலம்: 10-7-60 ஞாயிறு காலை 9 மணி
தலைவர்:
எஸ். ஏ. இராசமாணிக்கம், எம், சி.

(2)
புஷ்பா தியேட்டர், திருப்பூர்
காலம்: 10-7-60 ஞாயிறு பிற்பகல் 2-30 மணி
தலைவர்:
ஆனந்தன், பி. ஏ. பி. எல்.

சொற்பொழிவாளர்கள்:
ஈ. வெ. கி. சம்பத், எம். பி.
கவிஞர். கண்ணதாசன்
கே. ஏ. மதியழகன்

அனைவரும் திரண்டுவாரீர்
நன்கொடை: ரூ. 5, 3, 2, 1, 0-50 புதிய காசுகள்
கோவை நகர தி. மு. க.
திருப்பூர் நகர தி. மு. க.

தாய் மொழியை அழித்து வடவர் ஆதிக்கத்தை நிலை பெறச் செய்யவே இந்தி வருகிறது!

இந்தி அறப்போரில் தமிழர்கள் அனைவரும் ஒன்று சேருங்கள்!

எந்த கொடுஞ் செயலாலும் தமிழர்கள் உணர்ச்சியை அடக்க முடியாது, அழிக்க முடியாது!

வடவர்களின் மொழி வெறியால் தான் நாட்டுப் பற்று எழுந்தது!

பொதுச் செயலாளர் நாவலரின் போர் முழக்கம்!

சென்ற 23-6-60ந் தேதி மாலை சென்னை 93-வது வட்டம் கலைவாணர் நினைவுமன்ற ஆண்டு விழாவில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு வருமாறு:

அன்புசெழுமிய தலைவர் அவர்களே! அருமை நண்பர்களே! தாய்மார்களே! தோழர்களே!

சென்ற வாரம் நமது பொதுக்குழு குமாரபாளையத்தில் கூடி இந்த நாட்டில் இந்தியைப் புகுத்துவதை எதிர்த்து ஒரு மாபெரும் போட்டம் நடத்துவதென முடிவு செய்திருக்கிறது!

குமாரபாளையம் இந்த முடிவினால் ஒரு சிறப்புப் பெற்ற நகரமாகி விட்டது.

இலக்கியப்படி "பாளையம்" என்றாலே போர் வீரர்களின் களம் என்றே பெயர். அல்லது அதற்குப் போர் அணி என்றும் கூறலாம். நமது பொதுக்குழு நடைபெற்ற இடம் குமாரபாளையம் அந்த இடத்தில் நமதருமை நண்பர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் தலைமையில் 17 பேர் கொண்ட போர் நடாத்தும் குழு ஒன்றை நம் பொதுக்குழு அமைத்திருக்கிறது. வெகுவிரைவில் அந்தக் குழு போர் முறையை அலசியது நமக்குத் தரப் போகிறது.

நம்மை ஆளுகின்றவர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிற ஆணவமிக்க டெல்லி ஆட்சியினர், நம்மை ஏமாளிகளென்றும் நம்நாடு ஏமாந்த சோணகிரிகள் வாழுமிடமென்றும் எண்ணி நாம் விரும்பாத மொழியான இந்தியைத் திணிக்க முற்பட்டு விட்டார்கள். இந்த நாட்டில் இந்தியை எதிர்ப்பவர்கள் எவருமிலையென்று இறுமாப்போடு இந்தச் செய்கையை செய்திருக்கிறது!

இந்தியை எதிர்ப்பவர்கள் சாமானியமானவர்கள்; சக்தியற்றவர்கள்; பலமற்றவர்கள் அவர்களை ஆட்சியாலும் சட்டத்தாலும் அடக்கு முறையாலும் அடக்கிவிடலாமென்று இந்த மாநிலத்திலுள்ள அமைச்சர்களும், வடநாட்டு இந்திவெறியர்களும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாநில முதலமைச்சர் கனம் காமராசர் நம்முடைய போர் குரலைக் கேட்டவுடன் வழக்கமான முறையில் ஆணவமாகப் பேசியிருக்கிறார்.

"திராவிட முன்னேற்றக் கழகத்தார் போராட்டம் என்று துள்ளி குதிக்கிறார்கள். அவர்கள் தலையில் அடித்து உட்கார வைப்பேன்" என்று கூறுகிறார். அவரால் முடிந்தவரை நம் தலையில் அடிக்கட்டும் அவருக்குத் தலையில் அடிக்கும் அளவு வலிவும், திறனும் இருக்கிறதென்பதை அறிந்தே நாம் போர்க் கொடியை உயர்த்தியிருக்கிறோம்.

இந்த மாநில அரசினிடம், துப்பாக்கியும், தடியும், இராணுவமும், குண்டுகளும் இருக்கிறதென்பதை அறிந்தே நாம் இந்தப் போராட்டத்தைத் துவக்கியுள்ளோம். இன்று ஆட்சியிலுள்ளவர்கள் வலுத்தவர்கள். அவர்கள் கை வலுவுடையது என்று அறிந்தே நாம் போர் பரணியை வகுத்திருக்கிறோம். காமராசர் காட்டும் பயத்தைக் கண்டு அஞ்சி விடுகின்றவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தார் அல்ல.

காமராசர் இந்தி வெறியர்களுக்கு—இந்திக்கு வக்காலத்து வாங்குகிறார். அவர்களுக்கு உடந்தையாக இருப்பதாகக் காட்டிக் கொள்கிறார்.

இப்படிப்பட்ட இந்த மாநில முதலமைச்சரை நான் தமிழனென்று ஒரு போதும் ஒப்புக் கொள்ளமாட்டேன். அவரை தமிழர்களின் விரோதி—தமிழர்களைக் காட்டிக் கொடுப்பவர்—தமிழ் நாட்டின் எதிரி என்றே



கூறுவேன்.

இன்று தமிழ் நாட்டிலுள்ள தமிழர்களெல்லாம் முன்னேற்றக் கழகக் கொடியின் கீழ்—அதன் தலைமையின் கீழ் ஒன்றுபட்டுவிட்டார்கள். தங்களது மொழியையும், நாட்டையும் அழிக்க நினைக்கும் எதேச்சாதிகாரத்தை ஒழிக்க தமிழர்கள் போர் குரல் எழுப்பி விட்டார்கள். அதை அடக்க-ஒடுக்க ஒழிக்க எவராலும் முடியாது.

இந்தியை எதிர்க்கின்ற நாம் இந்த நாட்டில் நடமாடவிடக் கூடாது, நம்மை அடக்கிவிட வேண்டும் என்று ஆட்சியினர் நினைக்கின்றனர்.

நம்மை அடக்கிவிட்டால், ஒடுக்கி விட்டால், ஒழித்து விட்டால், இந்த நாட்டில இந்தியை எதிர்ப்பவர்கள் எவருமிருக்க மாட்டார்கள். பின் அவர்கள் எண்ணப்படி இந்தியைப் புகுத்தி விடலாம். என எண்ணுகிறார்கள்.

நான் ஆட்சியாளருக்கு உறுதியாக ஒன்று கூற ஆசைப்படுகிறேன்.

எங்களை அழித்து விடுவதாலோ. அடக்கி விடுவதாலோ இந்தி எதிர்ப்பு நின்று விடும் என்று எண்ணி ஏமாந்து விடாதீர்கள். இந்தி எதிர்ப்பு எங்

(9ம் பக்கம் பார்க்க)

செங்குருதி கொட்டி செயலாற்றும் நாள் வந்து விட்டது!

ஏமாளிகள் என்று நினைக்கும் ஏகாதிபத்திய வெறியர்களுக்கு பாடம் கற்பிக்க வாரீர்! வாரீர்! திரண்டு வாரீர்!

(சம்பத் பேச்சு)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் தாக்கி வருவதைப் பற்றியும், இன்று கூட்டத்திற்கு தலைமை தாங்கியுள்ள நமது தோழரை மாற்றார் தாக்கியதைப்பற்றியும் பேசினார்கள்.

இந்த மாதிரி ஈனச் செயலால் நாம் அழிந்துவிட மாட்டோம். இப்படிச் செய்வது புதிதான காரியமல்ல. நம் கழகம் ஆரம்ப காலத்திலிருந்தே பலர் இந்த மாதிரி பலாத்காரத்தால் அழித்துவிட நினைத்து செயலில் இறங்கினார்கள். நாம் ஆற்றிவரும் மாசற்ற தொண்டால்—நம்முடைய மகத்தான பணியால் அவர்கள் நம் முன் நிற்க முடியாது ஓடினார்கள். இன்று நாம் அடைந்திருக்கும் வளர்ச்சியின் முன், நமக்குப்பின் இருக்கும் மக்கள் சக்தியின் முன் இந்த காலித்தனம்—கயமைத்தனம் நிற்க முடியாது. இதையெல்லாம் பொருட்படுத்தாது நமக்கு முன் உள்ள நமது பணியை கவனிப்போம்.

நமது அண்ணா அவர்கள் நமக்கு ஆரம்பத்திலிருந்தே மூன்று கடமைகளை வகுத்துத் தந்திருக்கிறார்கள். அது தான் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதாகும், அதை ஆரம்பத்திலிருந்தே கடைப்பிடித்து வந்ததால் தான் இன்று மக்களின் முன் ஒரு மாபெரும் சக்தி வாய்ந்த இயக்கமாகத் திகழ்ந்து வருகிறோம்.

நமக்கு அண்ணா அவர்கள் தந்த அந்த மூன்று மந்திரங்களின் முன் எந்த எதிர்ப்பும் நிற்க முடியாது ஓடியிருக்கிறது. நமக்கு வகை. வகையான எதிர்ப்புகளும். வித, விதமான காலிச் செயல்களும் வந்தன. அவைகளையெல்லாம் சமாளித்து முன்னேறி வந்திருக்கிறோம்.

இன்று நாம் தமிழக அரசியலில் தலை நிமிர்ந்து. மிக உன்னத நிலையை அடைந்துள்ளோம்.

இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கும் அரசியல் கட்சிகளெல்லாம் கவனிக்க வேண்டிய—சிந்திக்க வேண்டிய ஒரு இயக்கமாக நமது இயக்கம் இருந்து வருகிறது.

மிகக் குறுகிய காலத்தில் அதாவது பத்தாண்டுகளில் எந்தவித சக்திகளையும் கொண்ட இயக்கங்களும் அடைய முடியாத உன்னத நிலையை நமதியக்கம் பெற்றிருக்கிறது.

இந்த மாபெரும் வளர்ச்சிக்கு காரணம் என்ன? அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

ஒன்று எந்த இயக்கங்களுக்குமில்லாத இலட்சியம், கொள்கையிலிருக்கும் உரம். நியாயமான—நேர்மையான பணி. நம்முடைய அடிப்படையான இலட்சியமே உரிமையை அடிப்படையாகக் கொண்டது கொள்கை.

நம்முடைய இலட்சியத்தில் உயிரோட்டமிருக்கிறது. நாட்டிலுள்ள மக்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தை நம்புகின்றனர் அதன் கொள்கைகள் புனிதமானது என்று எண்ணுகின்றனர்.

இரண்டாவதாக நாம் இலட்சியத்தைச் கையாளும் முறை, நாம் பெற்றுள்ள கண்யம் இவைகள் தான் நம்மை இன்று இந்த மாபெரும் வெற்றிக்கு ஆளாக்கியுள்ளது.

நாம் இன்று மகத்தான போர் பாதையில் செல்ல வேண்டியிருக்கிறது. நம்முடைய விடுதலையில், உரிமையில் இடையூறாக நின்று நம்மை என்றும் அடிமைகளாக — உரிமையற்றவர்களாக ஆக்க வடநாட்டு ஏகாதிபத்திய வெறியர்கள், மொழி வெறி கொண்ட தருக்கர்கள் முனைந்து விட்டார்கள். அந்த மண்டை கனம் கொண்ட மதோன்மத்தர்களுக்கு-ஆட்சி வெறியர்களுக்கு நல்ல பாடம் கற்பிக்க நாம் இன்று போர் குரல் எழுப்பி விட்டோம்.

நம்முடைய வீரத்திற்கு வடநாட்டு செறுக்குப் பிடித்தோர் சவால் விட்டு விட்டார்கள். அவர்கள் செறுக்கை அடக்க நாம் நமது போர் படையை அணிவகுக்க வேண்டிய நிலை நமக்கு ஏற்பட்டு விட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகத்தான தலைமையில் தாய் மொழியை காக்க— இழந்த நாட்டைப் பெற—நமது உயிரினும் மேலான உரிமையை யடைய ஒரு பெரும் அணி வகுப்பு தயாராகி விட்டது. அந்த அணிவகுப்பில் தென்னக மக்கள் எல்லாம் திரண்டெழுந்து விட்டார்கள்.

நம்மை கேலியும், கிண்டலும் செய்து, பழித்துப் பேசி வரும் ஆணவமிக்க அதிகார வர்க்கத்தினர் செய்கையைப் பற்றி நாம் கவலைப்படாது நமது கடமையில் கவனம் செலுத்தி பணியாற்றி வருவோம்.

இந்தப் போராட்டம் திராவிட முன்னேற்ற கழகத்தின் போராட்டமல்ல. இது நாட்டு மக்களின் நலனுக்காகப் போராடும் போராட்டம். இதில் தமிழர்கள்! எல்லோரும் பங்கு கொள்ள வேண்டும். நம் நாட்டு மொழியைக் காக்க. வீட்டுக்கொருவர் வரவேண்டும்,

நமக்கு போராட்டத்தை தவிர வேறு வழியில்லை.

இங்கு நம்முடைய மந்திரிகள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் நம் மீது அக்கரை இல்லாதவர்கள், நாட்டின் மீதும். நாட்டு மொழியின் மீதும் பற்றில்லாதவர்கள். அவர்கள் வடநாட்டிலுள்ள ஏகாதிபத்தியக்காரர்களின் எடுபிடிகள் அவர்களுக்கு வால் பிடிப்பவர்கள் அவர்களை நம்ப முடியாது. ஆகவே முன்னேற்றக் கழகம் துவங்கியுள்ள இந்தப் போராட்டத்தில் தமிழர்களெல்லாம் பங்கு கொள்ள வேண்டும்.

நம்முடைய போராட்டம் வெறும் மொழிப் போராட்டம் மாத்திரமல்ல. இழந்த நாட்டை மீட்கும் போராட்டம். நம்முடைய முன்னோர்கள் பல சூதுக்காரர்களின் வஞ்சகர்களின் நயவஞ்சகத்தால் நம்முடைய நாட்டை இழந்தார்கள் இழந்த நாட்டை மீண்டும் மீட்க வேண்டியது அவர்களின் சந்ததியார்களாகிய நமது கடமையாகும்.

ஒரு குடும்பத்தில் எப்படி தகப்பன் பட்ட கடன்களை மகன் தீர்க்க வேண்டியது கடமையோ, அது போன்று தகப்பன் இழந்த—தகப்பனிடமிருந்து பறிக்கப்பட்ட சொத்துக்களை மீட்க வேண்டியது நமது கடமையாகும். ஆகவே இழந்தபொன்னாட்டை மீட்க நடைபெறும் போராட்டத்தில் பங்கு கொள்ள வாரீர்.

ஆகஸ்டு மாதம் 30-ம் தேதிக்கும் பின் இந்த நாட்டில் மகத்தானதோர் போராட்டம் நடைபெறப் போகிறது. அந்தப் போராட்டத்தின் சக்தியை, வலிமையை உலகம் பூராவும் கண்டு திகைக்கும் வண்ணம் இருக்கப் போகிறது.

குமாரபாளையத்தில் கூடிய நமது பொதுக் குழு இந்தியக் குடியரசு தலைவருக்கு ஆகஸ்டு 30ம் தேதி வரை தவணை கொடுத்திருக்கிறது. ஆகஸ்டு 30-ம் தேதிக்குள் இந்தியைப் பற்றிய தமது தாக்கீதை குடியரசு தலைவர் திருப்பிப் பெற்றுக் கொண்டு, இந்தியை தென்னகத்தின் மீது பலவந்தமாக திணிப்பதில்லை, பாராளுமன்றத்தில் பிரதமர் நேரு வாக்குறுதி அளித்தபடி இந்தி அறியாத மக்களின் அபிப்பிராயத்தை அறியாமல் இந்தியை கட்டாயமாக தேசிய மொழியாக்குவதில்லையென்று கூறிவிட வேண்டும், அப்படி கூறவிட்டால்- ஆகஸ்டு 31-ம் தேதி தென்னகமெங்கும் கண்டனக் கூட்டங்களும். கண்டன ஊர்வலங்களும் கண்டன ஆர்ப்பாட்டங்களும். நடைபெறும் இந்தத் தீர்மானத்தின் விளக்கத்தைச் சிலர் புரிந்து கொள்ளாது "இந்தப் போராட்டம் ஆகஸ்டு மாசம் 31-ம் தேதி மட்டும் தான் நடைபெறுமா?" என்று கேட்கிறார்கள். நமது தோழர்கள் பலரே அவ்விதம் கேட்கிறார்கள்.

இந்தப் போராட்டம் ஒரு நாள் போராட்டமல்ல. ஆகஸ்டு 31ம்தேதி கண்டனநாள் கொண்டாடப்படும் அதற்குப் பின் போராட்டக் குழு ஆணைப்படி எப்படி; எப்படி போராட்டம்நடைபெறுமென்பதை முடிவு செய்யப்படும்.

இப்பொழுதே நாங்கள் இந்தப்போராட்டம் எப்படி இருக்க வேண்டும், எப்படி நடத்த வேண்டும் என்பதைப் பற்றி திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறோம்.

நமது தோழர்கள் பலர் எங்கெங்கு செல்வது? எப்படி எப்படி போராட்டத்தில் கலந்து கொள்வது என்பதையெல்லாம் முடிவு செய்திருக்கிறோம்.

இந்தப் போராட்டம் ஒரு நாளில் முடியும் போராட்டமல்ல. டெல்லியிலுள்ள செறுக்கு மிக்கவர்களின் ஆணவம் அடங்கும் வரை—அவர்கள் மமதை நீங்கும் வரை இந்தப் போராட்டம் நடைபெறும்.

டெல்லியிலுள்ள பெரிய மனிதர்கள் என்போர்கள் நம்முடைய எதிர்ப்பை எல்லாம் புறக்கணித்து; 1965 முதல் இந்தி இந்த நாட்டின் தேசிய மொழி என்று குடியரசு தலைவர் பாபுராஜேந்திரப் பிரசாத்தின் மூலம் அறிவித்து விட்டார்கள்.

பண்டித நேருவை ஒரு பெரிய மனிதர், நாணயக்காரர் சொன்ன சொல்லைக் காப்பவர் என்று எண்ணி இருந்தோம்; இன்று அவர் ஒரு தந்திரக்காரர், வஞ்சகர், நாணயமற்றவர். வாக்குறுதியை நிறைவேற்றாதவர் என்பதை நாம் கண்டு கொண்டோம்.

அகில உலகமெல்லாம் தம்மை செல்வாக்கு மிக்கவரென்று காட்டிக் கொள்பவரும், நேர்மையும், நீதியும் வாய்ந்த ஒரு பெரியமனிதரென்று பறைசாற்றி வரும் நேரு தாம் கொடுத்த வாக்குறுதிப்படி நடந்து கொள்ளவில்லை!

அவர் வாக்குறுதி கொடுத்தது மைதானத்திலல்ல. மிகப் புனிதமான மன்றமெனக் கருதும் மக்கள் சபையில் வாக்குறுதி கொடுத்தார் அந்த வாக்குறுதியைக் காற்றில் பறக்க விட்டு விட்டார்.

(11ம் பக்கம் பார்க்க)

இந்தப் போரின் மூலம்தான் நாட்டு விடுதலைக்கு விமோசனம் பிறக்கும்!

வடவர்களின் எடுபிடிகளின் ஏசலுக்கு அஞ்சாதீர்கள்!

(நெடுஞ்செழியன் பேச்சு)

(7ம் பக்கத் தொடர்ச்சி)

களோடு நின்று விடும் என்று நினைத்து விடாதீர்கள்.

உங்களிடம் இருக்கும் அதிகார பலத்தாலும், ஆணவமாக பேசிவிடுவதாலோ, கிண்டலும் கேலியும செய்து விடுவதாலோ இந்தி எதிர்ப்பை அழித்து, ஒழித்துவிட முடியாது.

எங்களையும், எங்கள் உணர்ச்சிகளையும் அடக்கினாலும் அடக்கலாமே தவிர, நாட்டிலே வளர்ந்துள்ள இந்தி எதிர்ப்பு உணர்ச்சிகளையும், தேசிய விடுதலை வேட்கையையும் அடக்கிவிடவே முடியாது. அது தொடர்ந்து வலுப்பெற்று நிற்குமே ஒழிய, அது மறையாது.

நாங்கள் நடத்தும் போராட்டத்தால் இந்த நாட்டில் இந்தி எதிர்ப்பு உணர்ச்சி, இந்நாடு விடுதலை அடைய வேண்டுமென்ற ஆர்வம் அதிகமாக வளருமே தவிர குறையாது.

எங்களது இந்தப் போராட்டத்தால் உலகத்திற்கே பெரும் வியாபத்தையும், நேர்மையையும் உண்டாக்கப் போகிறது.

டில்லியிலுள்ள இந்தி ஏகாதிபத்திய வெறியர்கள், நாம் இந்தி எங்களுக்குத் தேவையில்லை, எங்கள் மீது திணிக்காதே என்று கூறி வந்தும், நாம் நீண்ட நாட்களாக எதிர்த்து வந்தும் அந்த எதிர்ப்பை மதிக்காமல், இந்த நாட்டு மக்களை அலட்சியப்படுத்தியும் மமதையோடும், ஆணவத்தோடும் இந்தியைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் கொண்டுள்ள அகந்தையையும், மமதைதையும் ஒழிக்கவே நாம் போர்க்கொடியைப் பிடித்திருக்கிறோம்.

தென்னாட்டு மக்கள் இன்று விடுதலை உணர்ச்சியைப் பெற்றிருக்கிறார்களென்றால் அந்த உணர்ச்சி இன்று கொழுந்துவிட்டு எரியுதென்றால் வடநாட்டவர்கள் பிடிவாதமாகத் தங்கள் மொழியான இந்தியைத் திணிகக முற்பட்டதேயாகும். இதை இந்திவெறியர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நம்முடைய தென்னக மக்களுக்கு நாம் அடிமைப்பட்டிருக்கிறோம், நாமும் விடுதலை அடைய வேண்டும், நாம் தனியாட்சி நடத்த வேண்டும் என்ற வேட்கைப் பிறந்ததே 1937ம் ஆண்டிற்குப் பின்பு தான்.

இந்த மாநிலத்தில் திரு. ஆச்சாரியார் 1937ல் முதலமைச்சராக இருந்து வந்தார். அப்போது இந்தியைக் கட்டாயப்பட மாகப் புகுத்தப் போகிறேன் என்றார். இந்த மாநிலத்திலுள்ள 100 பள்ளிகளிலாவது இந்தியைப் புகுத்தியே தீர்வேன் என்று அன்று ஆணவமாகப் பேசினார்.

பெரியார் கட்டாய இந்தியை எதிர்க்கிறார் என்பதை அறிந்த ஆச்சாரியார் இந்த மாநிலத்தை ஆளுவது நானா அல்லது இராமசாமி நாயக்கரா என்று அகந்தையோடு பேசிவிட்டு இந்தியைக் கட்டாயமாகப் புகுத்துவேன் என்றார்.

இதைப் பார்த்த பின் தான், பெரியார் ராமசாமி, மறைமலை அடிகள், சோமசுந்தர பாரதியார், அண்ணா போன்றவர்கள் எல்லாம் வீரத்துடன் எழுந்தார்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தினார்கள்.

அந்தக் காலத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை பலர் கேலி செய்தாகள் கிண்டல் செய்தார்கள்.

இந்தி புகுத்துவதால் தமிழ் அழியாது என்றார்கள், இந்தி இருப்பதால் தமிழ் வளருமென்றார்கள். இந்தியை எதிர்த்துப் போரிட்ட மறைமலை அடிகளும், பெரியாரும் இந்தி வந்தால் தமிழ் அழியும! தமிழர் நாகரீகம் மறையும், தாய் மொழிப் பற்று இல்லாது போகும் அப்படித் தாய் மொழிப் பற்றில்லா விட்டால் தாய் நாட்டுப் பற்றில்லாது போகும், அப்படி ஏற்பட்டால் பிறருக்கு அடிமையாக வேண்டிய நிலை தான் ஏற்படும். என்று பேசினார்கள்!

இந்தப் பேச்சுக்களைத் தென்னகத்து மக்கள் கேட்டதும் அவர்களுக்குத் தமிழன் மீது பற்று ஏற்பட ஆரம்பித்தது, தமிழ் உணர்ச்சி பிறக்க ஆரம்பித்தது.

தமிழைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் அவனுக்கு பிறந்தது, தமிழ் நூலகளைப் படித்துத்தான் இலக்கியங்களை ஆராய்ந்தான். அதன் பயனாக தமிழ் வரலாறுகளைப் படிக்கலானான் அதனால் விழுக்தெழுந்தான. அந்த வரலாற்றில் சேர, சோழ பாண்டிய மன்னர்களைப் பார்த்தான். அவர்கள் அரசாண்டதையும், அவர்கள் வீரத்தையும் அறிந்து கொண்டான்.

தமிழ் நாட்டில் அன்று இருந்த வளத்தையும், தமிழ் மன்னர்கள் எவர் தயவையும் எவர் உதவியும் இன்றி அரசாட்சி செய்து இந்த நாட்டின் புகழை உலகமே அறியும் படி செய்தார்கள் என்ற வீர வரலாறுகளைப் படித்தார்கள். மற்றும் தமிழ்மன்னர்களின் வீரத்தையும், அவர்கள் பல போர்களில் வென்றதையும் தமிழ் நூல்களிலிருந்து கண்டான. அவன் எண்ணத் தொடங்கினான். இத்தனைக்கும் தமிழ் மொழியே பயன்பட்டது என்றால் நமக்கு இந்தி எதற்கு? என்று எண்ணத் தொடங்கினான், சிந்தித்தான், அவனே ஒரு முடிவுக்கு வர எண்ணினான்.

வட நாட்டுக்காரனாகிய உன்னிடம் நாங்கள் அடிமைப்பட்டிருப்பதால்தானே உன்டைய மொழியாகிய இந்தியை எங்கள் மீது புகுத்துகிறாய் உன்னிடம் ஆட்சி பலம் இருப்பதாக எண்ணி தானே இந்தியைப் புகுத்துகிறாய், உன்னோடு இணைந்திருப்பதால் தானே எங்கள் மீது. உன் மொழியைக் கட்டாயமாகப் புகுத்துகிறாய், எங்கள் நாட்டை எங்கள் கையில் கொடுத்து விடு, நாங்கள் ஆண்டவர்கள் என்ற முடிவை அன்று தமிழன் முடிவு செய்தான்— தமிழர்கள் தீர்மானித்தார்கள் அதை கொட்டி 1938-ல் தமிழ் நாடு தமிழருக்கே' என்று முழக்க மிட்டார்கள்!

அதை சென்னைக் கடற்கரையில் கூடிய மாபெரும் பொதுக் கூட்டத்தில் தீர்மானித்தார்கள். அந்தக கூட்டத்திற்கு மறைமலை அடிகள் தலைமை வகித்தார்கள் தமிழ் நாடு தமிழருக்கு ஆக வேண்டுமென்ற தீர்மானத்தை காலஞ் சென்ற திரு. சோமசுந்தர பாரதியார் கொண்டு வந்தார், பெரியார் வழி மொழிந்து பேசினார்.

இந்தத் தீர்மானத்தை அன்று கூடியிருந்த ஒரு இலட்சம் மககள் மகிழ்ச்சியோடு ஆதரித்தார்கள்.

இந்த எண்ணம் - உணர்ச்சி அதற்கு முன் ஏற்படவில்லை!

இந்தி மொழியை வலுக்கட்டாயமாக 1938ல் ஆச்சாரியார் புகுத்த நினைந்ததால் தான் ஏற்பட்டது.

1938-ல் நமது தென்னக மக்களுக்கு உண்டான மொழிப் பற்று 1940ல் இனப்பற்றாக மாறியது.

திருவாரூரில் நடைபெற்ற நீதிக் கட்சி மகாநாட்டில் தமிழ் நாடு தமிழருக்கே என்ற முழக்கம் மாறி. திராவிட நாடு திராவிடர்க்கே என்ற முழக்கம் ஏற்பட முடிந்தது.

அன்று அந்த மாநாட்டிற்கு வந்திருந்த ஆந்திரப் பிரமுகர்களே நாம் இந்தியை எதிர்பதை ஆதரித்து. "இந்தி வருவதால் உங்களுக்கு என்ன கேடு ஏற்படுமோ அந்தக் கேடுகள் மற்ற மாநிலங்களுக்கும் ஏற்படும்" என்று கூறி. திராவிட நாட்டுப் பிரிவினையை ஆதரித்தார்கள். ஆந்திரப் பிரமுகர் பி. இராமச்சந்திர ரெட்டி, முனிகன்னையா போன்ற பிரமுகர்கள் மாநாட்டில் திராவிட நாட்டுத் தீர்மானத்தை ஆதரித்தார்கள், மொழிப் பற்றும், இனப் பற்றும் ஒன்று சேர்வதற்கான அடிப்படை காரணம் இந்தியைப் புகுத்த எண்ணியதால் தான் ஏற்பட்டது.

நாம் அன்று இந்தியை எதிர்த்து போராடிய போது பலர் நம்மை கேலியும் கிண்டலும் செய்தார்கள். நமக்கு இடையூறுகளும் புரிந்தார்கள். இன்று அப்படிப் பட்டவர்கள் இந்தி வந்தால் உண்டாகும் பலனை அனுபவிக்கிறார்கள்.

அஞ்சல் அட்டைகளிலும் வானொலியிலும், பள்ளிகளிகளிலும் இந்தி கட்டாயமாகப் புகுந்து விட்டது.

1965-ம் வருடத்துக்குப் பின் இந்தி படிக்கா விட்டால் பரீட்சையில் தேற முடியாது, இந்தி படிக்காதவர்களுககு உத்தியோகம் கிடையாது, பதவி உயர்வு கிடையாது, சம்பள உயர்வு கிடையாது. தமிழனுக்கு எந்த உரிமையும் கிடையாது, அவன் வரிகொடுப்பதற்குத் தான் உரிமையுடையவன் என்ற நிலை வந்து விட்டது.

நாம் இந்தியைப் புறகணிக்கிறோம் என்று கூறுகிறார்கள்; அது தவறு நாம் இந்தியைப் புறக்கணிக்கவில்லை வடநாட்டு ஏகாதிபத்திய வெறியர்கள், இந்தி வெறி கொண்டவர்கள் தமிழைப் புறக்கணிக்க ஆரம்பித்து விட்டார்கள். இதைத்

(12ம் பக்கம் பார்க்க)

உங்கள் உடலில் ஒருதுளி ரத்தம் சிந்தினால் என் கண்களிலே நீர் பெருகும்

(அண்ணா பேச்சு)

(4–ம் பக்கத் தொடர்ச்சி)

டிய நிலை ஏற்படலாம், அல்லது நீங்கள் பிணமாக வேண்டிய ஏற்பட்டாலும் ஏற்படலாம் எந்தவித இன்னல்களுக்கும் கலங்காத வீர உள்ளம் படைத்தவர்கள் என்பதை காட்டும் திடசித்தத்துடன் தயாராக வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்,

கல்லாடிப்பவர்களுக்கு கல்லாலும், இழித்துப் பேசுபவர்களுக்குச் சொல்லாலும் பதில் கூற வேண்டுமென்ற எண்ணம் நமக்கு வேண்டாம் அதற்குப் பதில் உயிரைக் கொடுத்து நாட்டை மீட்கும் வீர உள்ளம் படைத்தவர்கள் இருக்கிறோம் என்பதைக் காட்டக் கூடியவர்கள் எங்கும் யிருக்கிறோம் என்பதை காட்ட வேண்டும்.

திருவண்ணாமலையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது அந்த மாநாட்டில் இந்தியை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம்!

இந்தி இந்த நாட்டில் புகுந்தால் பலமான போராட்டம் நடத்தியேனும் அதை எதிர்க்க வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறோம். அங்கு நமது நண்பர்கள் பேசியப் பேச்சுகளை மீண்டும் ஒருமுறை படித்துப் பார்க்க வேண்டுமென்று விரும்புகிறேன், அன்றே நாம் கூறியிருக்கிறோம் இந்தியை இந்த நாட்டில் பலவந்தமாகப் புகுத்தப்பட்டால் போராட்டம் நடத்துவோம்" என்று கூறியிருக்கிறோம்.

அதை ஆதரித்து மாயவரத்திலும் புதுக்கோட்டையிலும் நடைபெற்ற நமது பொதுக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறோம்.

நாம் இப்படி எதிர்ப்புகள் தெரிவித்தும் நமது எதிர்ப்பை மதிக்காது, இந்திய குடியரசு தலைவர் இராஜேந்திரபிரசாத், 1965க்குப் பின் இந்தி இந்த நாட்டின் ஆட்சி மொழி எனத் தாக்கீது பிறப்பித்து விட்டார்.

இனி ஆங்கிலம் அகற்றப்பட்டு விடும். அதற்குப் பதில் இந்தி எல்லா விடங்களிலும் புகுத்த வேண்டிய வழி வகைகளைச் செய்வதற்கான திட்டங்களை வகுக்கும்படி உத்திரவு போட்டு விட்டு, குடியரசு தலைவர் லெனின் கிராடுக்குப் போய் விட்டார்,

இந்த நிலை ஏற்பட்ட பின்பு தான் நாம் குமாரபாளையத்தில் இந்தியை எதிர்த்து போரிட வேண்டுமென்ற முடிவுக்கு வந்துள்ளோம்! நாம் இதுவரை அவர்கள் என்ன முடிவுக்கு வரப்போகிறார்கள் என்று பொறுமையுடனும். பொறுப்புடனும் காத்திருந்தோம். அவர்கள் செய்கைக்குப் பின் தான் இந்த முடிவெடுக்க வேண்டியவர்களானோம்! திடீரென்றோ, அவசரப்பட்டோ இந்த முடிவெடுக்கவில்லை,

டெல்லி அரசினர் நம்மிடம் வம்புச் சண்டைக்கும், வலுச் சண்டைக்கும் வந்திருக்கிறார்கள்.

இந்த நாட்டில அமைதியும் நல்ல சூழ்நிலையும் நிலை பெற வேண்டுமென்று ஆட்சியாளர்கள் விரும்பினால் குடியரசு தலைவர் விடுத்துள்ள புதிய தாக்கீது திரும்பப் பெற வேண்டும்! இந்தியை இந்த நாட்டில் வலுக்கட்டாயமாகப் புகுத்த மாட்டோம், இந்தி பேசாத மக்களின் அபிப்பிராயத்தைக் கேட்காமலும், இந்தியை எதிர்ப்பவர்களின் எண்ணத்தைத் தெரிந்து கொள்ளாமலும் ஆட்சி மொழியாக்க மாட்டோம் என்று ஆட்சியாளர்கள் உத்திரவு பிறப்பித்து விட வேண்டும்.

இதைத் தான் நமது தென்னக மக்களின் சார்பில் நமது கழகப் பொதுக்குழு தீர்மானித்து இந்திய குடியரசுத் தலைவருக்கு அனுப்பி யிருக்கிறது.

இதற்குத தவணையாக ஆகஸ்டு 30 தேதி வரை கொடுக்கப்பட்டிருக்கிறது,

தென்னக மக்களின் இந்த வேண்டுகோளை, அவர்களின் தீர்மானத்தை இந்தியக் குடியரசுத் தலைவர் மதித்து தமது போக்கை ஆகஸ்டு 30ம் தேதிக்குள் மாற்றிக் கொள்ளா விட்டால் ஆகஸ்டு 31ம் தேதி அவரின் ஏதேச்சாதிகாரத்தைக் கண்டிக்கவும், நம்முடைய போர் முழக்கத்தை இந்த அவனியெல்லாம் உணரவும் கண்டன நாள் கொண்டாடப்படும்.

இந்தக் கண்டன நாள் நாடு, நகரம், பட்டி தொட்டிகளிலெல்லாம் கொண்டாடப்படும்.

நமது பொதுச் செயலாளர் நாவலர் அவர்கள் நமக்கு விடுத்துள்ள அறிக்கையில் கண்டனக் கூட்டங்களும், ஊர்வலங்களும் நடத்தும்படி உத்திரவிட்டிருக்கிறார்.

நமது பொதுச் செயலாளர் இதுவரை ஊர்வலங்களும், கூட்டங்களும் நடத்துங்கள் என்று தான் அறிவிப்பார். இப்பொழுது கூறுகிறார், கூட்டங்களுக்கும், ஊர்வலங்களுக்கும் தடை விதிக்கப்பட்டால் மீறி நடத்துங்கள்" என்று நமக்கு உத்திரவு தந்திருக்கிறார்.

நாம் அதன்படி நடந்து கொள்ளப் போகிறோம்,

ஆகஸ்டு 31ம் தேதி யன்று நாம் சென்னை கடற்கரையில நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்ளப் போகிறோம்,

முன்பு சர்க்கார் செய்தது போன்று உங்களை யெல்லாம் சந்திக்க முடியாது வழியிலேயே என்னையோ. நாவலரையோ சம்பத்தையோ, கருணாநிதியையோ. அன்பழகனையோ கைது செய்து விடுவார்களென்று நான் நினைக்கவில்லை. உங்களையும், எங்களையும் கடற்கரையில் சந்திக்க வைப்பார்கள், நாங்கள் பேச வந்ததும் எங்களை பேச விடாது தடுப்பார்கள். கூட்டத்தைக் கலைப்பதற்காக தடியால் அடிப்பது போன்ற பாவனை செய்து தடியைக்காட்டுவார்கள், ஆனால் அடிக்க மாட்டார்கள் ஏனெனில் நாம் இந்த ஆட்சியாளரின் தடியடியைத் தான் தாங்கி யிருக்கிறோமே. அவர்கள் எப்படி அடித்தாலும் தாங்கிக் கொள்வோம் என்பதை அறிவார்கள் அதனால், தடியால் அடிப்பது போன்று காட்டி விட்டு. மக்களைத் தடியால் அடித்து கலைத்தோம். கலையவில்லை கல்லையும் மண்ணையும் வீசி எறிந்தார்கள் நிலைமையைச் சமாளிக்க துப்பாக்கியால் சுடுவதைத் தவிர வேறு வழியில்லாமற் போய் விட்டது" என்ற நிலைமையை உண்டாக்க அரசினர் நினைக்கின்றனர்.

துப்பாக்கிக்குண்டுகள் வெடிக்கும். அந்த சத்தத்தைக் கேட்டு நீங்கள் ஓடப் போகிறீர்கள் !

உங்கள் பின்னால் துப்பாக்கியின் பயங்கரமும், முன்னால் பயங்கர இரைச்சலுடன் வரவேற்கும் கடலலைகளும் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இந்த இரண்டிற்கும் இடையில் நாம் நிற்கப் போகிறோம்.

துப்பாக்கிக் குண்டுகளால் சுட்டால நாம் ஓடக் கூடாது! நமது மார்பைக் காட்டி பண்டைய வீரத்தையும் தமிழர்கள் பண்பையும் காட்டியாக வேண்டும். நாம் கோழைகள் அல்ல. வீரர்களின் மரபில் தோன்றியவர்கள் என்பதைக் காட்டியே ஆக வேண்டும்.

ஆகஸ்டு 31ம் தேதியன்று உங்களில் எத்தனை பேர் கடமையை செய்வீர்கள், கண்ணியத்தைக் காட்டப் போகிறீர்கள் உங்களுடைய வீரத்தைக் காட்டப் போகிறீர்கள்" என்ற பட்டியலைத் தான் நான் உங்களிடம் எதிர் பார்க்கிறேன்

நான் இனி உங்களை அடிக்கடி சந்திக்க முடியாது உங்களுக்கு நான் அளிக்க வேண்டிய பயிற்சிகளை யெல்லாம் அளித்திருக்கிறேன். இனி நீங்கள் உங்கள் வீரத்தைக் காட்டத் தயாராக இருங்கள்!

நீங்கள் நெஞ்சில் உரம் பெற்றுள்ள வீரர்கள் என்பதை நானறிவேன், உங்கள் கரங்களில் வலிவும், வீர உணர்ச்சியும் கொண்டவர்கள் நீங்கள் என்பதையும் நானறிவேன்!

நம்முடைய இனம் நம்முடைய மரபினர் அல்லல் படுகிறார்கள் என்கின்ற போது அவர்களுக்கு ஈரத்தைக் காட்ட வேண்டும்.

நமது நாட்டிற்கு இழிவு உண்டாக்க—அடிமைப்படுத்த நினைக்கும் மாற்றானுக்கு வீரத்தைக் காட்ட வேண்டும் இது தான் நமது பண்பு.

இந்த நமது மரபுக் கேற்றவாறு உங்களில் எத்தனை, எத்தனை பேர், எந்தெந்த நேரத்தில் போரில் ஈடுப்பட போகிறீர்கள் என்ற பட்டியலைத் தான் எதிர் பார்க்கிறேன்.

நாம் இப்பொழுதே ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டும் ஆகஸ்ட்டு 31க்குப் பின் நடைபெறப் போகும் போராட்டத்திற்கு திட்டங்களை வகுத்துக் கொள்ள வேண்டும். நாம் இது நாள் பெற்றிருக்கிற பயிற்சியை ஆற்றலை காண்பிப்பதற்கு இது தான் தக்க தருணம் இந்த வாய்ப்பை இழந்துவிடக் கூடாது.

துப்பாக்கியால் சுட்டால் ஓடாதீர்கள். வீரமிழந்தவர்கள் என்று காட்டிக் கொள்ளாதீர்கள் அப்படியே படுத்துக் கொள்ளுங்கள். உங்கள் உடல் மீது இரும்பு பூட்ஸ்கால்களால் மிதிப்பார்கள் ஈரமற்ற—வீரமற்ற கோழைகள் என்பதை உலகம் அறியும்படி செய்யுங்கள். இவர்களின் கொடுமையை உலகத்திலுள்ளோர் கண்டு சிரிக்கும்படி செய்யுங்கள்.

நான் உங்களிடம் உறுதியாகக் கூறுகிறேன் இந்தப் போராட்டத்தில் 100 பிணங்களைத் தந்தால் அடுத்த ஆண்டில் திராவிட நாடு என்பதை மறந்து விடாதீர்கள்.

நான ஒரு பத்திரிகையில் இரண்டு தினங்கட்கு முன் ஒரு செய்தியைப் படித்தேன். ஒரு மோட்டார் ஓட்டி தவறுதலாக சின்னஞ்சிறு குழந்தையின் மீது மோட்டாரை ஏற்றி விட்டார் குழந்தை இறந்து விட்டது! இதைக் கண்ட ஊரார் பழைய காலத்து புத்தகங்களில் படித்தபடி தலையைக் கிள்ளி விட்டார்கள்,

இங்கு எங்களைச் சுட்டால்—நாங்கள் பிணமானால் எங்கள் இயக்கம் வளருமே ஒழிய அழியாது. எங்களுக்குள் பாசம் வளர்ந்திருக்கிறது. என் மீது குண்டு வீழ்ந்து இரத்தம் சிந்தினால் 3 கோடி மக்களின் கண்களில் கண்ணீர் வடியும். அதே போன்றுதான் 3கோடி மக்களில் எவர் உடம்பிலிருந்து இரத்தம் வடிந்தாலும் என் கண்ணில் இரத்தம் வடியும். நாங்கள் அவ்வளவு இரத்த பாசத்துடனிருந்து வருகிறோம்.

இந்தப் பாசம் தேர்தலின் போது ஏற்பட்ட பாசமல்ல, எங்கள் இரத்தத்தோடு கலந்த பாசம் இந்தப் பாசத்தைப் புரியாது காமராசர் ஆட்டம் போடுகிறார். இந்தப் பாசத்தால் அடைந்த விளைவுகளை காமராசர் புரிந்து கொள்ள வேண்டும்.

காமராசரைவிட எல்லா வகையிலும் பலம் படைத்த ஆச்சாரியார் காலத்திலே அஞ்சாத நாம், அவர் துப்பாக்கியைக் கண்டு பயப்படாத நாம் இன்று காமராசர் துப்பாக்கிகாக பயப்படப்போகிறோம்.

அன்று எனக்குப் பின்னால் மூன்று நான்கு துறவிகள் யிருந்தார்கள் அவர்களை வைத்து அன்று ஆச்சாரியுடன் போராடினேன்.

இன்று 3 கோடி பேர்கள் என்னுலை யிருக்கிறார்கள். அவர்கள் காக்கி உடை அணியாத சிம்மையாக்களாக யிருக்கிறார்கள்.

இந்தப் போராட்டம் இந்திப் போராட்டமல்ல நாட்டு விடுதலைப் போராட்டம்.

நான் உங்களிடம் கேட்பதெல்லாம் உங்கள் வீரத்தைத்தான் கேட்கிறேன்.

அந்த வீரத்தைக் கொடுக்கத் தயாராகுங்கள் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

வணக்கம்

இந்திக்கு முடிசூட்ட இந்தி வெறியர் முயற்சி !

நம் தாய்மொழியை அழிக்க தருக்கர்கள் திட்டம்!

வீரர்களே புறப்படுங்கள் களத்திற்கு !

(சம்பத் பேச்சு)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

காரணம் என்ன? நாம் கோழைகள், போராடும் தன்மையை இதழ்ந்தவர்கள். நமக்கு விடுதலை உணர்ச்சி இல்லை. அவர்கள் சொல்படி ஆடும் அடிமைகள் என்று நேருவும் வடநாட்டு ஏகாதிபத்திய வெறியர்களும் உணர்ந்து விட்டார்கள்.

இந்தியக் குடியரசுத் தலைவர் தாக்கீது வெளி வந்ததும் இன்று இந்தியை மிக துரிதமாகப் புகுத்த ஆட்சியாளர்கள் முனைந்து விட்டார்கள். எல்லா இலாகாக்களும் அவரசம் அவசரமாக உத்திரவுகளை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

உள்நாட்டமைச்சர் கோவிந்த வல்லபந்த் எல்லா அமைச்சர்களுக்கும் தாக்கீது அனுப்பி தங்கள், தங்கள் இலாக்களில் இனி இந்தியில் தான் எல்லா பணிகளும் நடைபெற வேண்டுமென்று உத்திர விட்டு விட்டார் இராணுவத்திலும் இந்தி புகுந்து விட்டது.

சர்க்கார் அலுவலகங்களில் இனி இந்தி படிக்காதவர்களுக்கு வேலை கிடையாது. இந்தி படிககாதவர்களுக்கு வேலை உயர்வு கிடைக்காது. வேலை நிரந்தரம் கிடையாது, சம்பள உயர்வு கிடையாது.

பள்ளிகளிலும் இந்த உத்திரவு தலையெடுக்க ஆரம்பித்து விட்டது. எல்லாப் பாடங்களிலும் தேறி இருந்தாலும் இந்தியில் மார்க்குகள் அதிகமாக வாங்கி இருக்க வேண்டும். அப்படி இந்தியில் மார்க்குகள் வாங்கா விட்டால் பெயிலானவர்களாகத் தான் கருதப்படுவார்கள்.

இந்தக் கொடுமையைப் பார்த்து பல பெற்றோர்கள் வருத்தப்படுகிறார்கள்.

நமது மாநில கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியம் இந்தி கட்டாயமாக இருக்காது என்று கூறி வந்தவர், "எப்படி யிருந்தாலும் படிக்க வேண்டியது தானே" என்கிறார்.

இந்த நிலையில் நாம் சும்மா இருந்து விட முடியுமா?

மொழிப் பற்றற்ற—நாட்டுப் பற்ற வடநாட்டுக் கையாட்கள் அவர்களின் அடிமைகள் எட்டுப் பேர் நமக்கு மந்திரிகளாக இருக்கிறார்கள்.

ஆகவே நாம் இனி சும்மா இருந்து விட முடியாது, நம்முடைய போர்க் குணத்தைக் காட்டியே ஆக வேண்டும்.

நம்மில் பலர் இல்லாமலேயே போனாலும் போகலாம் நம் உயிரை பணயம் வைத்தே நாம் இந்தப் போரில் குதிக்கத் தயாராகி விட்டோம்,

இந்த மாநில அமைச்சர்கள் நம்மை அடக்க பல அடக்கு முறைகளைக் கையாள எண்ணுவார்கள். தடி கொண்டு தாக்கலாம்,

துப்பாக்கியால் சுடலாம், கால்களை முறிக்கலாம், கைகளை ஒடிக்கலாம் எதற்கும் தயாராகவே நாம் இருக்கிறோம் என்பதைக் காட்ட வேண்டும்.

இன்று உலகத்தில் நடைபெற்று வரும் விடுதலைப் போராட்டங்களை நாம் பார்க்க வேண்டும், அவர்கள் சிந்தும் இரத்தங்களைப் பார்க்க வேண்டும். நாம் நடத்தும் போராட்டம் உலக அரங்கில் திடுக்கிடும் செய்தியாக இருக்க வேண்டும். உலகத்திலுள்ளவர்களின் கண்களைத் திறக்கும் போராட்டமாக இருக்க வேண்டும்.

இந்தப் போராட்டத்தில் பங்கு பெற தாய்மார்களும் தயாராக வேண்டும்,

நம்முடைய மாநில அமைச்சர்கள் போராட்டத்தை அடக்க நமது தலைவர்களை—எங்களை முன் கூட்டியே கைது செய்யலாம் எங்களை யெல்லாம் கைது செய்து விட்டால் போராட்டத்தை அடக்கி விடலாம் என்று எண்ணுகிறார்கள்.

நம்முடைய ஏழு. எட்டு பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்கலாம்,

இந்த நிலை ஏற்பட்டால் நீங்களே போராட்டத்தை எப்படி நடத்துவது, போராட்டம் எப்படி. எப்படி இருக்க வேண்டும் என்பதை நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள்.

இராணுவத்தாருக்குத் தளபதி இல்லா விட்டால் அவர்கள் எப்படி போர் முறையை அவர்களே வகுத்துக் கொள்கிறார்களோ அது போன்று நீங்களே வகுத்துக்கொள்ளுங்கள். இந்தக் கூட்டத்தை விட்டு நீங்கள் செல்லும் போது உங்களுக்குள்ளேயே ஒரு முடிவுக்கு வாருங்கள்.

இந்தப் போராட்டத்தில் தமிழராகப் பிறந்தவர்கள் எல்லோரும் பங்கு கொள்ள வேண்டும். இதில் பங்கு கொள்ளாதவர்கள் இரண்டாம் தரம் மூன்றாம் தரம் மானவர்கள் என்று தான் எண்ண வேண்டியிருககும் ஆகவே எல்லோரும், போராட்டத்திற்குத் தயாராகுங்கள்.

உங்களுக்கு நமது போர்க் குழு தரும் ஆணைப்படி நடந்து கொள்ளுங்கள்.

இன்று நமது தோழர்கள் தமிழ்நாடு பூராவும் சுற்றி வருகிறார்கள், தமிழ் நாட்டு மக்களைச் சந்தித்து வருகிறார்கள்.

இன்றிலிருந்தே பட்டியலைத் தயார் செய்யுங்கள்!

காமராசர் சர்க்கார் இன்று கீழ்த்தரமான போக்குக்குப் போய்க் கொண்டிருக்கிறது,

வடநாட்டாருக்கு நாட்டைக் காட்டிக் கொடுக்கும் கயவர்களாக இருந்து வருகிறார்கள்.

காமராசர் துப்பாக்கியைக் காட்டி நம்மை, மிரட்டுகிறார் அந்த துப்பாக்கிகளையெல்லாம் நாம் பார்த்திருக்கிறோம். அந்தத் துப்பாக்கியில் என்ன இருக்கிறதென்பதையும் நாம் அறிவோம் அதைக் கொண்டு தமிழர்களை அடக்கி விடமுடியாது.

பம்பாயில் நடைபெற்ற மராட்டிய மாநிலம் அமைக்க நடைபெற்றப் போராட்டத்தில் அவர்கள் சிந்திய இரத்தம் கொஞ்சமல்ல—அவர்கள் கொடுத்த உயிர்கள் கொஞ்சமல்ல.

அவர்கள் உணர்ச்சிகளை, அவர்கள் வீரத்தை அடக்க நேருவும், நேரு சர்க்காரும் செய்த அடக்கு முறைகளும் துப்பாக்கிப் பிரயோகங்களும் கொஞ்சநஞ்சமல்ல, அங்கு நடந்த ரத்தவெள்ளங்கள் எவ்வளவு, எத்தனை பிணங்கள் விழுந்தது. பிரதமர் நேருவே அவர்களை அடக்குவதாக முழக்க மிட்டார். கடைசியில் நிலைமை என்ன ?

சர்க்காரின் துப்பாக்கிகளும், போலீஸ் தடியடிகளும், ராணுவத்தின் அடக்கு முறையும் அவர்களது விடுதலை உணர்ச்சியின் முன் நிற்க முடியவில்லை.

அவர்கள் கடைசியில் வெற்றி பெற்றார்கள் எதிர்த்த நேருவே ஆரம்பித்து வைத்தார்.

ஆகவே விடுதலைப் போராட்டங்கள் எவ்வித அடக்குமுறையாலும் அடங்கி விடாது.

அதை அடக்கவும் முடியாது.

இந்தியை அரியாசனத்திலமர்த்திட இந்தி வெறியர்கள் திட்டம் போட்டு விட்டார்கள்.

இந்தி வந்தால் வடவரின் ஆதிக்கம் இங்கு ஏற்பட்டு நாம் என்றும் தலைதூக்காத நிலை ஏற்பட்டுவிடும்.

இந்த சந்தர்ப்பம் நல்ல சந்தர்ப்பம் இதில் ஆண்களும் பெண்களும் குடும்பம், குடும்பமாகப் பங்கு பெற்று போராட்டத்தில் சேர்ந்திட வாரீர் என அழைக்கிறேன்.

இந்தப் போராட்டம் நமது கழகத்தாருக்கு மட்டும் சொந்தப் போராட்டமல்ல. தமிழ் நாட்டிலுள்ள அனைவரும் பங்குகொள்ள வேண்டிய போராட்டம் இதில் நாம் பின் வாங்கினால் நெடுநாட்களுக்குத் தலையெடுக்க முடியாது. நம்முடைய பின் சந்ததியார்கள் நம்மை இகழ்வார்கள் ஆகவே போராட்டத்தில் குதிக்கத் தாயாராகுங்கள் என்று கூறி விடைபெறுகிறேன்.

Registered as a News Paper in CEYLON
Regd. No.M. 7074 MALAIMANI விலை 16 காசு இலங்கையில் 20 சதம் Phone 83285

தமிழ் நாட்டில் இந்தி வருவதை ஆதரிப்பவர்கள் தமிழர்களாகமாட்டார்கள்!

தமிழுக்கும் நாட்டிற்கும் துரோகிகள் அவர்கள்!

(நெடுஞ்செழியன் பேச்சு)

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

தென்னகத்திலுள்ள அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்தி இருக்க வேண்டிய இடத்தில் வாழ வேண்டிய இடத்தில் பல்லாண்டு வாழட்டும். இந்தியே எங்கும் இருக்கக் கூடாதென்று கூறும் இழி பிறவிகளல்ல நாம்.

வடநாட்டிலுள்ள டில்லியிலோ, உத்திரப் பிரதேசத்திலோ இந்தியைப் புகுத்தட்டும், ஆரம்பப் பள்ளியிலிருந்து பல்கலைக் கழகங்கள் வரை இந்தியைக் கட்டாயபாடமாக்கட்டும். அதைபற்றி நமக்குக் கவலை இல்லை. தமிழன் இருக்கும் இடத்தில்—தமிழ் இருக்கின்ற இடத்தில் உன்னுடைய மொழியான இந்தியைப் புகுத்தாதே. நாங்கள் எங்கள் மொழி இருக்கும் போது வேற்று மொழியான இந்தியை எந்த விதத்திலும் ஏற்க மாட்டோம்.

நாம் இந்தியை எதிர்க்கிறோம் என்பதால் நாம் தமிழ் வெறியர்களல்ல. காம் இக்தி காவலர்கள்.

தமிழ் வழங்கி வரும் தமிழ் நாட்டில் தமிழ் கூடாதென்கிறோம்.

தமிழ் நாட்டிற்கு இந்தி வரட்டும், தாய் மொழி வேண்டாம். இந்தியே இருக்கட்டும் என்று வடநாட்டுக்காரனுக்கும், இந்திக்கும் வக்காலத்து வாங்கி பேசுகின்ற, தமிழ் நாட்டில் பிறந்த தமிழ் மகன் என்று கூறிக் கொண்டிருக்கிறனே. அவன் இழி மகன், ஈனன், ரத்தத்தில் சூடு சொரணையற்ற சோற்றாலடித்த பிண்டம், மான மற்றவன், கேடு கெட்டவன், தமிழ்ப் பண்பை மறந்தவன்.

இப்படிப்பட்ட ஈனப் பிறவிகள் இந்த நாட்டில் இருப்பதால் தான் வடநாட்டு வெறியன் "இந்தியைப் புகுத்துவேன்" என்று கூறுகிறன்,

தமிழ் நாட்டில் தமிழே படிக்கத் தெரியாத நிலையில் தமிழர்கள் இருக்கும் போது இங்கு இந்தி எதற்கு?

நம்முடைய தமிழ் நாட்டில் தமிழைச் சரியாக எழுதவும், படிக்கவும் தெரியாதவர் 100க்கு 76 பேர்கள் இருக்கிறர்கள்.

இலக்கண வரம்போடு பிழையற எழுதத் தெரிந்தவர்கள மிகக் குறைவு இந்த நிலையில் இந்தி வந்தால்—இந்தியைப் புகுத்தினல் தாய் மொழி என்னவது.

ஆகவே இந்தியை எதிர்க்க தீவிரமாக நீங்கள் வரவேண்டும்!

திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியை எதிர்த்துப் போராட்டம் நடத்தி விட்டால் இந்தி ஒழிந்து விடுமா? என்று முதலமைச்சர் காமராசர் கேட்கலாம்.

இந்தி ஒழிகிறதோ, இல்லையோ அது பற்றி இப்போது கூற முடியாது. நாங்கள் நடத்தும் போராட்டம். வடநாட்டு ஆதிக்கத்தை ஒழிக்க, எங்களுடைய இலட்சியம் நிறைவேற அடிப்படையாக இருக்கும் என்பதை மட்டும் ஆட்சியாளருக்கு நிச்சயமாகக் கூறுகிறேன்,

நான் ஆட்சியாளர்களைக் கேட்க ஆசைப்படுகிறேன், நீங்கள் 1942ல் ஆகஸ்ட்டில் புரட்சி செய்தீர்களே, உப்பு சத்தியாக்கிரகம் நடத்தினீர்களே. சட்ட மறுப்புப் போர் நடத்தினீர்களே அப்போதெல்லாம் அவ்வொழிந்து உங்களுக்குச் சுதந்திரம் வந்ததா? வெள்ளையன் உடனே ஒழிந்தானு உங்களுக்கு 1947ம் ஆண்டில் தானே சுதந்திரம் கிடைத்தது. அப்படி சுதந்திரம் கிடைத்தது உங்கள் போராட்டத்தாலா கிடைத்தது. அகில உலக சூழ்நிலையின் காரணமாக வெள்ளையன் இங்கு இருந்து போக வேண்டிய நிலை வந்ததால் சுதந்திரம் கிடைத்தது.

காக்கை உட்காரவும், பனம் பழம் கீழே விழவும் என்ற பழமொழிப்படி உங்களுக்குச் சுதந்திரம் கிடைத்தது.

காங்கிரசார் நடத்திய போராட்டங்களெல்லாம் சுதந்திரத்திற்குப் படிக் கல்லாக இருந்ததோ அது போன்றுதான் இந்தப் போராட்டம் திராவிட நாடு பெறுவதற்கு அணி கலனுக இருக்கும்.

வடநாட்டிலுள்ள இந்தி வெறியர்களில் தலை சிறநது விளங்குபவர்களில் ஒருவரான சேத்கோவிந்ததாஸ் ஒரு அறிக்கையில் சொல்லுகிறர்,

''இந்தியாவின் ஒற்றுமையை நிலை காட்ட ஒரே ஒரு மொழி தான் இருக்க வேண்டும். அப்படி இருக்க வேண்டிய மொழி இந்தி மொழி.'

இப்படிக் கூறியிருப்பது எதைக் காட்டுகிறது இந்தியைத் தவிர வேறு எந்த மொழியும் இருக்கக் கூடாது, அவைகளை அழிக்க வேண்டும் என்பது தானே பொருள்.

இந்த எண்ணத்தை நாம் வளர விடலாமா? அப்படி வளர விட்டால் நம் தாய்மொழி அழியும், நம் தாயகம் அழியும். அதைப் போக்கவே நாம் போராட்டத்தைத் துவக்கப் போகிறோம்!

வடநாட்டு ஏகாதிபத்திய வெறியர்கள் இன்னும் ஒரு சூது எண்ணத்தாலும் சூழ்ச்சி கருத்தாலேயே இந்தியை ஆட்சி மொழியாக்குகிறர்கள்.

பல மொழிகளையும் வளர விட்டால் அவரவர்கள் உணர்ச்சி பெறுகி வடநாட்டுப் பிடியிலிருந்து பிரிந்து விடுவார்கள். அப்படி அவர்களுக்கு உணர்ச்சி வராதிருப்பதற்காகவே அவர்கள் மொழியை அழித்து விட வேண்டுமென்று எண்ணி விட்டார்கள்!

இந்திமொழி இந்த நாட்டின் அரசியல் மொழியாக ஆக்கப்பட்டால்—இந்தி இந்த நாட்டின் பொது மொழியாக ஏற்படுத்தி விட்டால் வெகு விரைவில் நாம் நம் தாய் மொழியாகிய தமிழ் மொழியை மறந்து விட வேண்டியது தான்—தமிழ் எழுத்துக்களையே நாம் மறக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். எல்லாம் இந்தி மயமாகி விடும்! பின் இந்த நாட்டிலுள்ளோரனைவரும் இந்திய இனத்தவர், அவர்கள் மொழி இந்தி என்ற நிலையை உண்டாக்கவே, வட நாட்டு வெறியர்கள் திட்டமிட்டு விட்டார்கள்.

இந்த மாநிலத்தில் வடவரின் எடுப்பார் கைப்பிள்ளைகளாக. மான ஈனமற்றவர்களாக—தமிழ் நாட்டு பண்பற்றவர்களாக இந்த மண்ணில் இருப்பதற்கு லாயக்கற்றவர்களாக -மலத்தில் நெளியும் புழுக்களாக- தன்மானமற்றவர்களாக இங்கு சிலர் வாழ்ந்து வருவதால் தான் இந்தி வெறியர்கள் தமிழ் நாட்டில் புகுத்தலாம் என்ற தைரியம் கொண்டனர். இந்த எதிர்ப்பவர்களே யில்லை என்று எண்ணம் கொண்டு, தங்களிடம் ஆட்சி இருக்கிறதென்ற மமதையால் இந்தியைப் புகுத்த முற்பட்டு விட்டார்கள்,

இந்திய அரசியல் நிர்ணய சபையில் இந்தியை ஆட்சி மொழியாக ஆக்கும் தீர்மானத்தை கட்சி கட்டுப்பாட்டாலும், அதிகார பலத்தாலுமே நிறைவேற்றினர்கள்.

இந்தி ஒன்று தான், ஆட்சி மொழியாக தேசிய மொழியாக ஆவதற்கான தகுதி படைத்திருக்கிறது என்று வடவர் எண்ணுகிறர்கள். அதற்குக் காரணம் அவர்கள் ஆட்சியில் இருக்கிறோம் என்ற எண்ணத்தால் தான்.

வளமும், வளர்ச்சியுமற்ற ஒரு மொழி—நாகரீகமும் பண்புமற்ற ஒரு மொழி மக்களின் ஆதரவையும், அன்பையும் பெருத மொழியான இந்தி மொழி எவ்வாறு பொது மொழியாக முடியும். அந்த இந்தி மொழிக்குப் பொது மொழியாவதற்கு என்ன தகுதியிருககிறது?

பண்டித நேரு மக்கள் சபையில் இந்தியைப் பற்றி பல தடவை வாக்களித்தார், இந்தியை அறியாத மாநிலத்தார் மீது இந்தியைத் திணிக்க மாட்டோம் என்று வாக்களித்தார். அந்த வாக்குறுதிக்கு மாருகவே இந்திய குடியரசுத் தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத் 1965 முதல் இந்தி ஆட்சி மொழி என்று தாக்கீது அனுப்பி விட்டார்.

பண்டித நேரு தன்து நாணயத்தை—வாக்குறுதியைக் காற்றில் பறக்க விட்டு விட்டார்.

இதையெல்லாம் முன்னிட்டே நமது பொதுக் குழு குடியரசுத் தலைவருக்கு ஆகஸ்டு 30ம் தேதி வரை தவணை கொடுத்திருக்கிறது. அதற்குள் அவர்கள் தாக்கீதை திருப்பி பெற்றுக் கொள்ள வேண்டும். திருப்பிப் பெற்றுக் கொண்டால் ஆகஸ்டு 31ம் நாள் தென்ன மெங்கும் மகிழ்ச்சி நாள் கொண்டாடப்படும், இன்றேல் கண்டன நாளாக-எதிர்ப்பு நாளாகக் கொண்டாடப்படும்.

இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஆகஸ்டு 31ம் தேதிக்குப் பின் மாபெரும் போராட்டம் நடைபெறும் அந்தப் போராட்டம் நம் உரிமைப் போராட்டம் - அறப்போராட்டமாக யிருக்கும். அந்தப் போராட்டத்தை அடக்க கொடுஞ் செயல்களை, அடக்கு முறைகளைக் கையாண்டால் தமிழர்கள் அஞ்ச மாட்டார்கள். அப்படி அவர்கள் செய்தால் அவர்களே தங்களுக்கு அழிவைத் தேடிக் கொண்டவர்களாவார்கள்.

அரசினர் எப்படிப்பட்ட கொமைகளையும் அடக்கு முறைகளையும் கொடுஞ்செயல்களையும் கையாண்டாலும் நாம் அறவழியில் நின்று போராட தயாராக இருக்கும்படி கேட்டு விடை பெறுகிறேன்.

வணக்கம்.

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்வி பிரகாசம் பிரஸ்,:
404 திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5 அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை-14.